REGISTERED AS NEWSPAPER

உதயன்

கூடர் :36
கதிர் : 014

வள்ளுவர் ஆண்டு 2051
கார்த்திகை 24

10 டிசெம்பர் 2020
வியாழக்கிழமை

விலை 30 ரூபா
பக்கங்கள் 20

செய்தி: 021 493 0000
விளம்பரம்: 021 493 1111



அனைவரும் ஓரணியில் நின்று விடுதலைக்கு வழிசமையுங்கள்

தமிழ் அரசியல் கைதிகள் மன்றாட்டம்

கொழும்பு, டிசெம்பர் 10

சிவில் அமைப்புக்கள் ஒன்றுபட்டு எமது பிரச்சினையை ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து எம்மை விடுவிக்க முன்வர வேண்டும். இதன்மூலம் எமக்கும் சமூகத்துடன் இணைந்து வாழ ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் எம்மைப் பிரிந்து நித்தமும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது உறவுகளின் கண்ணீருக்கும் ஒரு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கின்றோம்' 19

அரசியல்கைதிகளை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்

15 தமிழ் எம்.பிக்கள் கூட்டாகக் கடிதம் மகிந்தவுடனான சந்திப்பில் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 10
நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 80க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்யக் காலம் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் 19

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்

நல்லசெய்தி வரும் என்று நாம் காத்திருக்கின்றோம்

அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் சம்பந்தன் கருத்து

கொழும்பு, டிசெ. 10
'தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் நல்ல செய்தி வரும் என்று நாம் காத்திருக்கின்றோம் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் 19

30,000 தாண்டியது தொற்று

பலி 144

கொழும்பு, டிசெ. 10
இலங்கையில் நேற்றும் 694 பேருக்குக் கொரோனாத் தொற்று உறு 20

அம்பன் புயல்: இழப்பீடுகள் தொடர்பில் மீள்மதிப்பீடு

யாழ்ப்பாணம், டிசெ. 10
இந்த ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அம்பன் புயலால் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் மீள்மதிப்பீடு 20

"நிவார், புரேவி எண்டு ரெண்டு புயல் வந்து போட்டுது. உவை இன்னமும் போன வருசம் வந்த அம்பனுக்கு கணக் கெடுத்து முடியேலை பாருங்கோ"

முச்சந்தி முரளி

"அரசியல் கைதிகள் எவருமில்லை"

உதய கம்மன்பிலவின் கருத்துக்கு எதிர்ப்பலை!

கொழும்பு, டிசெ. 10
இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில வெளியிட்டுள்ள கருத்துக்கு சிவில் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்பை 19

கோத்தாவுடன் கலந்துரையாடி விரைவில் தீர்க்கமான முடிவு!

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து பிரதமர் மகிந்த கருத்து

கொழும்பு, டிசெ. 10
'தமிழ் அரசியல் கைதிகளை விடு விக்கக் கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19

பவுசருடன் மோதியது கார் சிறுவனும் பெண்ணும் சாவு

நுணாவிலில் மதியநேரம் பரிதாபம் மூன்று பேர் சிகிச்சையில்

கொடிகாமம், டிசெ. 10
தென்மராட்சி நுணாவிலில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் பவுசர் மீது கார் மோதியதில், காரில் பயணித்த சிறுவனும் குடும்பப் பெண்ணும் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயங்களுடன் யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் 20

கொரோனா சட்டத்தை மீறி சபாநாயகர் இல்லத்தில் இன்று பட்ஜெட் விருந்து

கொழும்பு, டிசெ. 10
பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இன்று நிறைவேற்றப்பட்ட பின்னர், 19

தவிசாளர் நிரோஷுக்கு கிடைத்தது முன்பிணை!

யாழ்ப்பாணம், டிசெ. 10
வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2ஆள் பிணையில், முன் பிணையில் மல்லாகம் நீதிவான் நீதிமன் 20

கல்வி முன்னேற்றத் திட்டங்களின்போது கொரோனாவை இடையூறாகக் கருதாதீர்!

கல்வித்துறை அதிகாரிகளிடம் ஜனாதிபதி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 10

முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்வித்துறை முன்னேற்றத்துக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கொவிட் நோய்த்தொற்றைத் தடையாகக் கொள்ளவேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கல்வித் துறை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

மனிதவள அபிவிருத்தி என்பது அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். நாட்டின் எதிர்கால தலைமுறையினரை உற்பத்தித் திறன்மிக்க பிரஜைகளாக உருவாக்க அவர்கள் புதிய அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு தற்போதைய நிலைமைக்கு மத்தியில் இடையூறு ஏற்படக்கூடாது என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து இராஜாங்க அமைச்சுகளும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மீளாய்வுசெய்யும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (09) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஒரு தேசிய கல்விக் கொள்கையை விரைவாக உருவாக்குவதற்கு "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தரத்துக்கு ஏற்ப தயாரிக்கப்படும் குறிப்பிட்ட குறிக்கோளுடன் கூடிய தனிப் பாடத் திட்டத்தின் கீழ் முன்பள்ளி முதல் பட்டப்படிப்பு வரை கல்வி முறைகளை உருவாக்குவது மற்றொரு நோக்கமாகும்.

இலக்குகளை அடைந்துகொள்ள கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் கல்வி சீர்திருத்தம், திறந்த பல்கலைக்கழகங்கள், தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அறநெறிப் பாடசாலைகள்இ பிக்கு கல்வி, பிரிவேனா மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள் இராஜாங்க அமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள், கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு மற்றும் திறன் விருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு ஆகியன முன்னெடுத்துள்ள திட்டங்களை ஜனாதிபதி தனித்தனியாக ஆராய்ந்தார்.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பியல் நிஷாந்த, விஜித பேருகொட, சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (கு)

தேக்கம் குற்றிகளுடன் மடக்கப்பட்டது டிப்பர்

சாரதி தப்பியோட்டம்

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியிலிருந்து யாழ்பாணம் கடத்தப்படவிருந்த 12 தேக்கமரக்குற்றிகளை கிளிநொச்சி மது ஒழிப்பு பொலிஸார் மடக்கினர்.

அதன் சாரதி தப்பியோடி விட்டார்.

கடத்தப்பட்ட 12 மரக்குற்றிகளுடன் டிப்பர் வாகனத்தை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளோம் என்று அந்தப் பிரிவுப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (கு-113)

வவுனியாவில் மின் தடை

வவுனியா, டிசெ. 10

அத்தியாவசிய பராமரிப்பு வேலைகளுக்காக வவுனியா சூடுவெந்த புலவு கிராமத்தில் இன்று மின் தடைப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

பராமரிப்பு வேலைகளுக்காக எதிர்வரும் 10ஆம் திகதியிலிருந்து ஏனைய இடங்களில் மின் தடைப்படும் என்றும் சபை தெரிவித்தது. (த-18)

மக்களின் அடிப்படை உரிமைகள் கொரோனாவால் மீறப்படவில்லை

மனித உரிமைகள் தின செய்தியில் பிரதமர்

கொழும்பு, டிசெ. 10

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் எவரது அடிப்படை உரிமைகளும் மீறப்படவில்லை. மனித உரிமை, மக்களின் அடிப்படை உரிமை ஆகியனவற்றைப் பாதுகாப்பதில் அரசு பொறுப்புடன் செயற்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சுபீட்சமான நாடு என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து இன மக்களின் மனித உரிமைகளையும் பாதுகாத்து அவர்களின் சுபீட்சமான எதிர்காலத்தை உறுதி செய்யும் வகையில் அரசு செயற்படும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியிலும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தவாறு அரசு செயற்பட்டு வருவது அனைவரும் அறிந்த விடயம். அரசு என்ற வகையில் நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது அவசியம். ஆட்சியமைத்த ஒவ்வொரு முறையும் மனித உரிமைகளைப் பாதுகாத்து நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பலப்படுத்தியுள்ளோம்.

சுபீட்சமான எதிர்காலம் என்ற கொள்கையின் கீழ் அனைத்து இன மக்களின் உரிமைகளையும் பாதுகாத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

நேரில் சென்று துயர் தெரிவித்தார் கிளி. மருத்துவமனைப் பணிப்பாளர்

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சியில் இறந்தவர்களின் சடலங்கள் உரிய குடும்பத்தவர்களிடம் வழங்கப்படாது மாற்றி வழங்கப்பட்ட நிலையில், மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் இறந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் துயரில் பங்குகொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் உயிரிழந்த இருவரின் சடலங்கள் உறவினர்களால் மாறி எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றிருந்தது.

பின்னர், உரியவர்களிடம் அவை ஒப்படைக்கப்பட்டிருந்தன.

மாவட்ட மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடல்கூற்று பரிசோதனைக்காக பொலிஸார் முன்னிலையில் உறவினர்களால் அடையாளம் காட்டப்படுவது வழமை. அன்றைய தினமும் அவ்வாறே நடைபெற்றபோதும், அடையாளம் காட்டப்பட்டதில் ஏற்பட்ட தவறால் இந்த துயரச்சம்பவம் எதிர்பாராது நடைபெற்றுள்ளது. இந்தத் துயரச்சம்பவம் வருந்தத்தக்கது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் தெய்வத்துள் வைக்கப்படுவார்' என்ற தெய்வ வாக்குக்கு இணங்க, மிகக் குறுகிய மானிட வாழ்க்கையில் அவர்தம் அற்புத வாழ்வின் அழகான முற்றுப்புள்ளியாக மரணம் கருதப்படுகிறது. எனவே துயற்றிருக்கும் குடும்பத்தினரை மேலும் துயருறச்செய்த சம்பவமானது தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. குறித்த துயரில் நாமும் பங்குகொள்கின்றோம், ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

(த6, 113)

பொது சுகாதாரப் பரிசோதகரின்

கடமைக்கு இடையூறு புரிந்தனரென நெல்லியடியில் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 10

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் வடமராட்சி-நெல்லியடியில் இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுத்திகரித்த தண்ணீர் விநியோகிக்கும் நபர்களிடம், அதற்குரிய அனுமதிப் பத்திரத்தைக் காண்பிக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். அதற்கு அவர்கள் மறுத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-26)

குடும்பத் தலைவரை காணவில்லை

முல்லைத்தீவு, டிசெ. 10

மாடு மேய்க்கும் குடும்பத் தலைவர், வீட்டிலிருந்து கடந்த 6ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளார் என்று அவருடைய குடும்பத்தினர் தெரிவித்தனர். அவரைப் பற்றி தகவல் தெரிந்தவர்கள் 0775814221 என்ற அலைபேசி இலக்கத்தினூடாகத் தெரியப்படுத்துமாறு குடும்பத்தினர் கோரியுள்ளனர்.

மல்லாவி அனிஞ்சியன்குளம், பகுதியைச் சேர்ந்த சுவாமிநாதன் மோகனதாசன் (வயதுய 61) என்பவரே காணாமல்போயுள்ளார். (கு)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, டிசெ. 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அவர்களது உறவினர்கள் இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர். ஆயிரத்து 373ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அவர்கள், தங்களுக்கு நீதி கோரிய இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதிலும் காணா மல் ஆக்கப்பட்டோரை தேடும் உறவினர்கள் போராட்டம் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.19)

பொலிஸ்மா அதிபரை தனிமைப்படுத்தவில்லை!

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, டிசெ.10

பொலிஸ்மா அதிபர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றும் 150 அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது உண்மைக்குப் புறம்பானது மூவருக்கு மட்டுமே வைரஸ் தொற்றியுள்ளது. அத்துடன், பொலிஸ்மா அதிபர் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என வெளியாகியுள்ள தகவல்களையும் நிராகரிக்கின்றேன் என்றார். (ற-44)

சேவைகளைப் பெறுவதற்கு முன் அனுமதிகள் கட்டாயம்

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.10

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு வருவதற்கு முன்னர் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும் என்று குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர்கள் திணைக்களத்தின் வளாகத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். விசா சேவைகள் மற்றும் கடவுச்சீட்டு சேவைகளுக்கு www.immigration.gov.lk எனும் இணையத்தளத்துக்கு பிரவேசித்து ஒன்லைன் மூலம் முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒன்லைன் பதிவுகளுக்கு மேலதிகமாக தொலைபேசிகள் மூலமாகவும் அழைத்து பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

அதன்படி, கடவுச்சீட்டுக்களுக்கான ஒரு நாள் சேவை விண்ணப்பதாரர்கள் பத்தரமுல்லை தலைமை அலுவலகத்தின் 0707101060, 0707101070 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு காலை 8 மணி முதல் நண்பகல் 1 மணி வரை அழைப்பினை மேற்கொண்டு முன்பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றார். (ஜ-இ)

விபத்தில் சிக்கிய ஊழியர் உயிரிழப்பு

வவுனியா, டிசெ. 10

வவுனியா நகரசபை ஊழியர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்திருந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். வவுனியா நகர சபையில் சாரதியாக பணிபுரியும் வாவு (வயது 49) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

ஒரு வாரத்துக்கு முன்னர் இவர் விபத்தில் சிக்கியிருந்தார். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வவுனியா கூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் விபத்துக்குள்ளாகியிருந்தார். படுகாயமடைந்த அவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் முன்னெடுத்தார். (ஒ.110)

பாம்புக்கடிக்கு இலக்கான இருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், டிசெ. 10

கல்லுண்டாய் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் இருவர் நேற்று முன்தினம் பாம்புக் கடிக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உறக்கத்திலிருந்தபோது இரவு 11 மணியளவில் குடும்பப் பெண் ஒருவரை பாம்பு தீண்டியுள்ளது. அவரை மருத்துவமனையில் சேர்த்தபோது, தீண்டிய பாம்பை பிடித்து வருமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவர் பாம்பை எடுத்துச் செல்ல முயற்சித்துள்ளார். அவரையும் பாம்பு தீண்டியுள்ளது. அவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வீடுகளைச் சுற்றி வெள்ளநீர் தேங்கி நிற்பதாலேயே பாம்புகள் அங்கு வருகின்றன என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ.27)

ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு

மிகுதி 62,000 பேருக்கு விரைவில் நியமனம் !!

கொழும்பு, டிசெ.10

ஒரு லட்சம் பேருக்கு அரச தொழில்களை வழங்கும் கொள்கை திட்டத்துக்கு அமைய இதுவரையில் 38 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதியாகவுள்ள 62 ஆயிரம் பேருக்கு விரைவில் தொழில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கல்வித் தகைமையில்லாத இளைஞர் யுவதிகள் ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் திட்டம் அரசின் சுபீட்சமான கொள்கை திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

கல்வித் தகைமையில்லாதவர்கள் தவறான வழியில் செல்கிறார்கள். இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இதனடிப்படையில் இதுவரையில் 38 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கொவிட்19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக 1 இலட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பு என்ற இலக்கை அடைய முடியவில்லை. 62 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனம் விரைவில் வழங்கப்படும் - என்றார். (ற-இ)

பட்ஜெட் கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவு!

இறுதி வாக்கெடுப்பின் பின்னர் ஜன.5 இல் நாடாளுமன்றம் கூடும்

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் கன்னி வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது.

அரசும் அதன் தோழமைக்கட்சிகளும் பாதீட்டை ஆதரித்து வாக்களிக்கவுள்ளதுடன், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கவுள்ளன.

2021 ஆம் நிதியாண்டுக் கான வரவு - செலவுத்திட்டம் கடந்த 17 ஆம் திகதி நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடத்தப்பட்டு, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

இந்நிலையிலேயே பாதீடுமீது இறுதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. சிற்சில திருத்தங்கள் சகிதமே பாதீடு நிறைவேற்றப்படவுள்ளது. பாதீட்டு கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். அதன்பின்னர் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகும். (ஒ.44)

தேர்தல்கள் ஆணைக்குழு

உறுப்பினர்கள் இன்று கடமை பொறுப்பேற்பு

கொழும்பு, டிசெ. 9

தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களும் இன்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

ஆணைக்குழுவின் தவிசாளராக நிமல் ஜீ.புஞ்சிஹேவா வும், உறுப்பினர்களாக எம்.எம்.மொஹமட், எஸ்.பீ.திவாரத்ன, கே.பி.பி.பத்திரன, ஜீவன் தியாகராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இன்று தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளனர். (ஒ.இ)

வடக்குக் காணிகள் சூழ்ச்சியால் அபகரிப்பு

இரண்டு அமைப்புக்கள் குற்றம் சுமத்துகின்றன

வவுனியா, டிசெ. 10

போர் காரணமாக அரசு வடக்கில் ஏற்கனவே காணிகளை அபகரித்து வைத்துள்ள நிலையில், சூழ்ச்சிகள் ஊடாக மேலும் காணிகளை அபகரிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. அதனைப் பாதுகாக்கவேண்டும் என்று வடக்கு மாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பும், பிரஜா அபிலாசா வலை யமைப்பும் தெரிவித்துள்ளன.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பிலேயே அவை இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளன. ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட் டதாவது:

வடக்கில் ஏற்கனவே ஆக்கிரமித்த காணி களை விடுவிக்காமல் மேலும் காணி களை அபகரிக்கும் சூழ்ச்சியான திட்டங் களை முன்னெடுத்து அரசு செயற்படுத்தி வருகின்றது. வன உயிரிகள் திணைக் களம், தொல்பொருள் திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அபிவிருத்தி திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்றவற் றின் ஊடாக காணிகள் மற்றும் வாழ்வி டங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம்

1990ஆம் ஆண்டு போர் காரணமாக வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக் களின் நிலங்களில் இன்னும் 3 ஆயி ரத்து 319 ஏக்கர் விடுவிக்கப்படவில்லை. விடுவிக்கப்பட்டது என்று சொல்லப்படு கின்ற பகுதிக்குள் 500 ஏக்கர் நிலத் துக்கு மேல் இப்பொழுதும் பாதுகாப்புத் தரப்பினரின் பிடிக்குள் உள்ளது. மண்டை தீவில் கடற்படையினர் 800 ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து உள்ளனர். சுண்டிக்குளத்தில் 48 ஆயிரத்து 347 ஏக்கரும், நெடுந்தீவில் 4 ஆயிரத்து 562 ஏக்கரும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு

முல்லைத்தீவு முள்ளியவளையில் நித் தகைக்குளம் பகுதியில் 850 ஏக்கரும், தனிமுறிப்பு வீரன்குளத்தில் 80 ஏக்க ரும், குறுந்தூர் குளத்தில் 125 ஏக்கரும், குமுளமுனை குளத்து வெளியில் 22 ஏக்கரும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. கொக்குத் தொடுவாயில் 100 ஏக்கரும், கொக்குதொடுவாய் மத்தியில் 80 ஏக்க ரும், கொக்குதொடுவாய் தெற்கில் 400 ஏக்கரும், கேப்பாப்பிலவில் 55 ஏக்க ரும், முள்ளியவளை சூரியபுரத்தில் 38 ஏக்கரும், முள்ளிவாய்க்கால் மேற்கில் 25 ஏக்கரும், கொக்கிளாயில் 8 ஏக்க ரும், கருநாட்டங்கேணியில் 780 ஏக்க ரும் அபகரிக்கப்பட்டுள்ளன.

வவுனியா

நைனாமடுவில் ஆயிரத்து 700 ஏக்க ரும், வெடிவைத்த கல்லில் நாவலர் பண் ணையில் 100 ஏக்கரும், பட்டி குடியிருப்பு சேனப்பன் குளத்தில் 100 ஏக்கரும், கன கராயன் படுகாட்டுக்குளத்தில் 60 ஏக்க ரும், புளியங்குளம் தெற்கு பரிசாங்குளம் பகுதியில் 200 ஏக்கரும், மன்னகுளம் புதுவிளான்குளம் பகுதியில் 80 ஏக்க ரும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

மன்னார்

மன்னார் பள்ளிமுனையில் 2.2 ஏக்கர் படையினர் வசம் உள்ளது. இக் காணி 1990ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட தாகும். 2013ஆம் ஆண்டிலிருந்து மக்களால் நீதிமன்றத்தில் வழக்கு நடத் தப்பட்டு வருகின்றது. சிலாவத்துறையில் 36 ஏக்கர் காணி ஆக்கிரமிக்கப்பட்டுள் ளது. முள்ளிக்குளம் பகுதியில் 523 ஏக்கர் நிலமும் கொண்டச்சியில் 19.25 ஏக்கர் நிலமும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மன்னார் 6ஆம் பாலத்தில் 18 ஆயிரத்து 990 ஏக்கர் நிலமும் மடுவீதியில் 65 ஆயிரத்து 920 ஏக்கர் நிலமும் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி

கரைச்சியில் 94 ஆயிரத்து 875 ஏக்க ரும், கண்டாவளையில் 113.5 ஏக்கரும், பூநகரியில் 116.57 ஏக்கரும், பச்சிலைப் பள்ளியில் 166.91 ஏக்கரும் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளது.

நிலைமை இப்படியிருக்கும் போது இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒரு லட் சம் காணித் துண்டுகளை வழங்கும் திட்டத்தை அரசு முன்னெ டுத்துள்ளது. காணித்துண்டை பெறுவதற்கு ஆறு லட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள் ளன என அரசு அறிவித்துள்ளது.

இது எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்ப டுத்தி உள்ளது. இத் திட்டத்தை பயன்ப டுத்தி சிங்கள மக்கள் குடியேற்றப்பட வுள்ளனர் எனத் தோன்றுகின்றது. அரசு இதை செயற்படுத்துமாயின் இதய பூமி யான எமது வட பகுதி நிலங்களை இழப் பதுடன் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் இழக்க நேரிடும்.

வடபகுதி மக்களின் நிலங்களை விடு வித்து அரசின் எதிர்கால கபட நோக் கத்தை தோற்கடித்து வடபகுதி மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க தமிழ் அரசியல் தலைவர்கள், கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும் என்று அவர்கள் தெரி வித்தனர். (ஒ,110)

போதைப்பொருள் வியாபாரம் குறித்த விசேட கலந்துரையாடல்!

கொழும்பு, டிசெ.10

பாடசாலைகளை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் புகையிலை மற்றும் மதுபான விற்பனை என்ப வற்றுக்கு எதிராக முன்னெடுக்கப் பட வேண்டிய தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் விசேட கலந்து ரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சில் இடம்பெற் றது. சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் முன்னெ டுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடல் தொடர்பில் சுகாதார அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளதாவது,

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை அதிகாரிகளால், உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் பாடசாலை களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் தேசிய செயற்றிட்டங்கள் தொடர் பில் சுகாதார அமைச்சருக்கு விளக் க மளிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு புகையிலை மற்றும் மதுபான பாவனை குறித்த உலகலாவிய ரீதியிலான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மதிப்பீட்டுக்கு அமைய இலங் கையில் 10 வயதுக்கு அதிகமான ஆண் பிள்ளைகளில் நூற்றுக்கு 15.2 சதவீதமானவர்கள் புகை யிலை பாவிக்கின்றனர் எனவும், 5.5 சதவீதமானவர்கள் மதுபானம் பாவிக்கின்றனர் எனவும் தெரியவந் தது. இந்த நிலைமை தற்போது மேலும் அதிகரித்துள்ளது என இதன்போது தெரிவிக்கப்பட்டது என உள்ளது. (ற-இ)

ஆணைக்குழுவை நீக்க நாடாளுமன்ற அனுமதி!

உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முன் வைத்த காரணிகள் குறித்து ஆராயப்படுகிறது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நாடாளுமன்ற அனுமதியுடன் மாத்திரமே நீக்க முடியும். அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, மின்சா ரத்துறை, கனியவள கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு நேரடியாக அதிகாரம் செலுத்துகிறது. மின்சார கொள் வனவு மற்றும் மின் விநியோகம் உள்ளிட்ட விடயங் களில் மின்சாரத்துறை பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் அனுமதியை பெறவேண்டும்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்ற கேள்வி எழுந்ததைத் தொடர்ந்து ஆணைக்குழுவை நீக்க வேண்டும் என்று உரிய தரப்பினரால் குறிப் பிடப்பட்டது.

ஒரு சில காரணிகளை கொண்டு பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முடியாது. நாடாளுமன்ற சட்ட ஏற்பாட்டின் ஊடாகவே இந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. எனவே நாடாளுமன்ற அனு மதி ஊடாகவே பொதுப் பயன்பாட்டு ஆணைக்கு முவை நீக்க முடியும் - என்றார். (ற-இ)

கொடுப்பனவுகளை நிறுத்தி அறிக்கை கோரும் அமைச்சர்

கொழும்பு, டிசெ.10

கடவத்தை - மீரிகம அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணிகள் மந்த நிலையில் இடம்பெறு கின்றமை தொடர்பில் அறிக்கை தருமாறு பெருந் தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கட்டுமான பணிகள் மந்த நிலையில் இடம்பெற்ற போதும் இரண்டாவது கொடுப்பனவை மேற்கொள் ளுமாறு கோரிக்கை விடுக்கப்படடுள்ளமை இந்த கலந்துரையாடலின்போது தெரியவந்துள்ள நிலை யில், அதை மேற்கொள்ள வேண்டாம் என அமைச் சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அபிவிருத்தி பணிகள் உரிய முறையில் இடம்பெறாத திட்டங்களுக்கு பணம் செலுத்த வேண்டாம் என ஜனா திபதி தனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (வ-இ)

இதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ஏன் இந்த வக்கிர மனம்?

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஒரு போடுபோட்டுள்ளார் அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில அத்துடன், 'தாம் கொண்டுள்ள அரசியல் நிலைப்பாட்டால் கைதுசெய்யப்பட்டவர்கள்தான் அரசியல் கைதிகள். நீங்கள் சொல்லும் நபர்கள் பயங்கரவாதச்சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்டவர்கள்' என்று அரசின் நிலைப்பாட்டுக்கு விளக்கமும் வழங்கியுள்ளார் அவர்.

தற்போது தமிழர் மனங்களில் உள்ள கேள்வி ஒன்றுதான். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலின்போது தனது வாக்குறுதிகளில் ஒன்றாக அரசியல் கைதிகளின் விடுதலையையும் குறிப்பிட்டிருந்தார். இந்தத் தேர்தலின்போது மட்டுமல்ல போர்க்காலத்தின் பின்னர் இலங்கையில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களிலும் 'அரசியல் கைதிகள் விடுதலை' என்ற வாக்குறுதி மாறிமாறி பயன்படுத்தப்பட்டுத்தான் வருகின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளும்சரி, தேசியக் கட்சிகளும்சரி இந்த சொல்லாடலை பயன்படுத்துவது பட்டவர்த்தமானது. எனின், தேர்தலின்போது அரசியல் கைதிகளாகத் தெரியும் இவர்கள் தேர்தலின் பின்னர் எவ்வாறு பயங்கரவாதிகளாக நோக்கப்படுகின்றனர் என்பதை இந்த அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் பிரதிநிதிகளும் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு நீதி அமைச்சர் அலி சப்ரியை அண்மையில் சந்தித்து அவரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதன்போது, சந்திப்பு ஒன்றை ஜனாதிபதியுடன் ஏற்பாடு செய்தால் சட்டமா அதிபரையும் அழைத்து விரிவாகக் கலந்துரையாட முடியும் என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ் பிரதிநிதிகளும் தம் முகநூல்களில் கருத்துக்களைப் பகிர்ந்திருந்தனர். இப்போது கேள்வி என்னவென்றால், இலங்கையில் இல்லாதவர்கள் என்று சொல்லப்படும் அரசியல் கைதிகளுக்காக ஏன் ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்யவேண்டும் என்பதே. இல்லாத அரசியல் கைதிகளை எவ்வாறு விடுவிப்பது என்று அரச தரப்பில் உள்ள தமிழ் அரசியல் பிரதிநிதிகள்தான் உரிய விளக்கத்தை வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்கூட பிரதமர் மகிந்தவிடம் தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களை அண்மையில் கையளித்து அவர்களின் விடுதலையை வலியுறுத்தியிருந்தது. பிரதமரும் இது தொடர்பில் பரிசீலிக்கின்றேன் எனத் தெரிவித்திருந்தார். ஏன் இந்த ஏமாற்று வேலைகள். ஆறறிவுத் தனிமங்களை இவ்வாறு பந்தாடுவதன் மர்மம்தான் என்ன? பலஸ்தீனர்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன என்று வருத்தம் தெரிவிக்கத் தெரிந்த மகிந்தவுக்கு தன் நாட்டுக்குள் 'அரசியல் கைதிகள்' விவகாரம் பல்லாண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினையாக நீண்டுகொண்டிருப்பது இன்னமும் ஏனோ தெரியாதிருக்கின்றது.

ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகளையே புனர்வாழ்வின் கீழ் சமூகத்துடன் இணைத்துள்ளோம் என்று அடிக்கடி மார்தட்டிக்கொள்ளும் இந்த அரசுக்கு அரசியல் கைதிகள் விடயத்தில் தாம் எவ்வளவு வக்கிர புத்தியுடன் நடந்துகொள்கின்றோம் என்பது புரியவில்லையா?. சிறைகளில் இடப்பற்றாக்குறை காரணமாக 8 ஆயிரம் கைதிகளை இந்த மாதம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சிறு குற்றங்களுக்காக சிறைப்படுத்தப்பட்டவர்கள்தான் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றபோதிலும் ஓர் ஆயுள் தண்டனைக் கைதி அனுபவிக்கும் காலத்தை விடவும் அதிக காலம் சிறைவாசம் அனுபவித்து வரும் இந்த சிறைப் பறவைகளின் இறக்கைகளை அரசின் இரும்புக்கரம் ஏன் மேலும் இறுக்குகிறது என்பது இன்னமும் அவிழ்க்கப்படாத மர்ம முடிச்சு.

வெளிநாட்டு சக்திகளாலேயே முன்னைய அரசு உருவானது

தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.10

வெளிநாட்டு சக்திகளின் பின்னணியிலேயே, கடந்த 2015 முதல் நாட்டில் ஜனாதிபதிகள் மற்றும் அரசாங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதன் முறையாக சாட்சியமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் சாட்சியமளித்த அவர்; நாட்டின் தேசிய உளவுப் பிரிவுகளை விட, இந்நாட்டில் தாக்குதல் இடம்பெறப்போவது, அதற்கான இடம் மற்றும் அது தொடர்பான நேரம் ஆகியன வெளிநாட்டு உளவுத்துறையொன்றால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனூடாக இந்திய உளவுத் துறை இந் நாட்டில் எந்தளவு தூரம் செயற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. எமக்குத் தெரிந்தது இந்திய உளவுத் துறை மட்டும். இவ்வாறே எமக்குத் தெரியாமல் எமது நாட்டில் எத்தனை வெளிநாட்டு உளவுச் சேவைகள் செயற்படுகின்றன? இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

இவ்வாறான நிலைமை எதிர்காலத்திலும் தொடருமானால், குண்டு வெடிப்புக்கள் மூலம் எத்தனை அரசாங்கங்கள் கவிழ்க்கப்படும் என்பது தெரியாது - என்றார். (ப)

லைசென்ஸுக்கு புதிய முறை

கொழும்பு,டிசெ.10

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலில் புதிய முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதற்கமைவாக பஸ் மற்றும் கனரக வாகன சாரதி அனுமதி பெறும் நபர்கள் ஒரு மாத காலப்பகுதிக்குள் போதைப் பொருள் பயன்படுத்தியுள்ளனரா என்று ஆராயப்படவுள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி இந்த விசேட பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கனரக வாகனங்களின் சாரதிகள் மற்றும் பஸ்களின் சாரதிகள் போதைப் பொருள் பயன்படுத்திய நிலையில், வாகனம் செலுத்துகின்றனர் என்று முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதனைக் கருத்தில் கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க - இ)

டெலி சினிமா பூங்காவை சீரமைக்க அங்கீகாரம்

கொழும்பு. டிசெ.10

மஹிந்த ராஜபக்ச தேசிய டெலி சினிமா பூங்காவின் அத்தியாவசிய மீள் சீரமைப்புப் பணிகளை துரிதமாக முன்னெடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உள்ளூர் சினிமா மற்றும் டெலி சினிமாத் துறைக்குத் தேவையான ஒளிப்பதிவு காட்சிக் கூட வசதிகள் மற்றும் குறித்த துறையின் நிபுணர்களுக்கான தங்குமிடம் மற்றும் ஏனைய வசதிகளை சலுகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் உள்ர்ளூர் சினிமா மற்றும் டெலி சினிமாத்துறையை மேம்படுத்த மஹிந்த ராஜபக்ச தேசிய டெலி சினிமா பூங்கா அமைக்கப்பட்டது. கடந்த 4 வருடங்களில் இப்பூங்கா சரியான வகையில் பராமரிக்கப்படாததால், நிறுவனத்தின் பல்வேறு பௌதீக வளங்கள் அழிவடைந்துள்ளன.

குறித்த டெலி சினிமா பூங்காவின் அத்தியாவசிய திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து நிதியொதுக்கீடு செய்வதற்காக புத்த சாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர், பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ப)

2021 இல் மின் கட்டணத்தை அதிகரிக்க அரசு முயற்சி!

தேசிய அமைப்பொன்று குற்றச்சாட்டு

கொழும்பு. டிசெ.10

அடுத்த ஆண்டு தொடக்கம் மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்ததாவது;

ஒரு மின் அலகுக்கு 50 ரூபா என்ற அதிக கட்டணத்தை அறவிட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இலங்கை மின்சார சபை, தனியார் நிறுவனங்களில் இருந்து அதிக விலைக்கு மின்சாரம் பெற்றுக்கொண்டமையால், அரசாங்கத்துக்கு 300 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் எதிர்காலத்திலும் இவ்வாறான மின் கொள்வனவை மேற்கொள்ளத் தயாராகி வருகிறது. அதன்படி இலங்கை மின்சார சபையின் நட்டம் அடுத்த வருடமளவில் 500 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கும். அந்த நட்டத்தை ஈடுசெய்து கொள்ள அரசாங்கத்துக்கு இருக்கும் ஒரே வழி, நுகர்வோரிடம் இருந்து அதிக கட்டணத்தை வசூலிப்பதாகும் - என்றது (ப)

திருட்டில் ஈடுபட்ட இருவருக்கு மறியல்

சாவகச்சேரி,டிசெ.10

மழை நேரத்தில் கல்வயல் மற்றும் மட்டுவில் பகுதிகளில் ஏழு வீடுகளில் திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் கைதானவர்களில் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறும், மூவரை பிணையில் விடுவிக்குமா றும் சாவகச்சேரி நீதிமன்றால் உத் தரவிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி இரவு, வீடு களில் பொருத்தப்பட்டிருந்த இரகசிய கண்காணிப்பு கமெராக்களை சேதப் படுத்தி, ஏழு வீடுகளில் திருட்டு இடம் பெற்றுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட நடவடிக் கைகளின் பயனாக பெண் உட்ப ஐவர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர். அவர்களது வழக்கு விபரம் நீ தி வ ா னி ன் மு ன் னி லை யி ல் காணொளி மூலம் அறிக்கையிடப் பட்டது. இதன் பிரகாரம் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறும், ஏனையோரை பிணையில் செல்ல வும் நீதிவான் உத்தரவிட்டார். (க-9)

வெற்றியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

தேசிய கலை இலக்கிய விழாவின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணம் பிர தேச அளவில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிக்கப்புட்டனர். நிகழ்வு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சா.சுதர்சன் தலைமையில் நேற்று நடைபெற்றது. (ஐ)

ஷானி அபேசேகரவின் பிணை நிராகரிப்பு

கொழும்பு,டிசெ.10

குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின், பிணை விண் ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா உயர் நீதிமன்றால் குறித்த விண்ணப்பம் நேற்று நிராகரிக்கப் பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தின் முன்னாள் பணிப்பாள ரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கருமான ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரோஹண மெண்டிஸ் ஆகியோர் சாட்சியங் களை மறைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-இ)

கண்டி புவி அதிர்வு: அச்சம் வேண்டாம்

புவிச் சரிதவியல் பணியகம் தெரிவிப்பு

கண்டி, டிசெ.10

கண்டியில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த புவி அதிர்வு தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை என புவிச் சரிதவியல் மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணியகம் அறிவித்துள் ளது.

இது தொடர்பில் அந்த பணியகத்தின் தலைவரான அநுர வல்பொல மேலும் தெரிவித்ததாவது:

கண்டியில் ஏற்பட்ட நில அதிர்வைப் பொறுத்த வரை அது 2 .0 என்ற ரிச்டர் அளவிலேயே இருந்தது. இது பாதிப்பை தரக்கடிய அதிர்வு அல்ல. இந்த அதிர்வு கள் தொடர்பாக உரிய ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு விஷேட குழுவொன்று அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவினர் குறித்த நில அதிர்வு தொடர்பில் ஆராய்வுகளை மேற்கொண்டு தகவல்களை வெளியிடுவார்கள்.

கண்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் சுண்ணாம்புக்கல் அகழ்வுடன் நில அதிர் வுக்குத் தொடர்பு இருக்கிறதா என்பது தொடர்பில் இந்தக் குழு தீவிரமாக ஆரா யும். இதேவேளை இந்த நில அதிர்வுகள் காரணமாக மக்கள் குடியிருப்பு பகுதிக ளில் எவ்விதமான அச்ச நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என்றார். (ப)

பயிரழிவுகள் கணக்கெடுப்பு

தென்மராட்சி தெற்கு - மறவன் புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்ட வயல்களில், பயிர் அழிவு தொடர்பான விபரங்கள் கமக்கார அமைப்பால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களின் உரிமையாளர்கள் மற்றும் குத்தகையாளர்கள் அழி வின் தன்மையை உறுதிப்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் சி.திரு ஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். அந்தப் பகுதியில் உள்ள குளங் கள் அனைத்தும் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் நிறைந் துள்ளதால், அருகில் உள்ள சுமார் நூறுக்கு மேற்பட்ட ஏக்கர் வயல் களில் வெள்ளம் தேங்கி பயிர்கள் அழிவடைந்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (க-9)

கசிப்பை ஒழிக்க முன்னின்ற இளைஞனுக்கு வாள் வெட்டு

கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ.10

கிளிநொச்சி - வட்டக்கச் சிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்ப னையைக் கட்டுப்படுத்திய செயற்பாட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மீது வாள் வெட்டு இடம்பெற் றது என்று குற்றஞ்சாட்டப் படுகிறது.

கட்சன் வீதியில், நேற்று முன்தினம் ஒன்பது மணி யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தங்களது கிராமத்தில் இடம்பெற்று வந்த கசிப்பு உற்பத்தி மற் றும் விற்பனை உள்ளிட்ட சமூக விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கிராம இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பொலிஸா ரின் உதவியுடன் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர். இளைஞர்களின் நடவடிக்கை காரணமாக பல கசிப்பு உற்பத்தி யாளர்கள் மற்றும் விற்பனை செய்வோர் கைதுசெய்யப்பட்டி ருந்தனர்.

அத்தோடு கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களும் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த இளைஞர்கள் மீது கோபம் கொண்ட சட்டவிரோத நடவடிக்கை யில் ஈடுபடுகின்ற குழுவினர்அந்த இளைஞர்கள் தனித்தனி யாக பயணிக்கின்ற போது அவர்களை இலக்கு வைத்து தாக் குதலை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். அதன் ஒரு கட்ட மாகவே குறித்த இளைஞன் மீது வாள்வெட்டு இடம்பெற்றது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப-214)

தென்மராட்சியில்

700 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

சாவகச்சேரி, டிசெ.10

தென்மராட்சி பிர தேசத் தில் புரேவிப் புயல் மற் றும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட 700 குடும்பங்களுக்கு பிர தேச செயலகத்தால் முதல் கட்டமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

உலர் உணவுப் பொருள் கள் சாவகச்சேரி,கைதடி, மற்றும் கொடிகாமம் ஆகிய பலநோக்கு கூட் டுறவுச் சங்க கிளைக் கடைகள் ஊடாக இன்று தொடக்கம் விநியோ கிக் கப்படவுள்ளன.

கைதடி கிழக்கு, கோயிற் குடியிருப்பு , கல்வயல், நுணாவில் மேற்கு, வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம் மத்தி, கொடிகாமம் தெற்கு, கரம்பகம், கெற்பேலி, இடைக்குறிச்சி, கரம் பைக்குறிச்சி , குடமி யன், நாவற்காடு, மந்து வில் வடக்கு, மந்துவில் மேற்கு ஆகிய பிரிவு களைச் சேர்ந்தவர்க ளுக்கே இவை முதற்கட் டமாக வழங்கப்படவுள் ளன.

அடுத்த வாரம் ஏனைய பிரிவுகளுக்கு வழங்கப் படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-9)

மீள் சுழற்சிக்காக ஆய்வு ஆரம்பம்

சாவகச்சேரி,டிசெ.10

சாவகச்சேரி நகர சபைக்குட் பட்ட பகுதியில் சேரும் கழிவு களை உக்கக்கூடிய கழிவு மற்றும் உக்காத கழிவுகள் எனத் தரம் பிரித்து மீள்சுழற்சி செய்வதற்கான ஆய்வு ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

வேள்ட் விஷன் மற்றும் சென ரத் நிறுவனங்களின் பின்லா திட்டத்தின் ஊடாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் 30 வரு டங்களின் பின்னர் சாவகச் சேரி நகரசபை பிரதேசத்தில் இவ்வாறான ஆய்வு மேற் கொள்ளப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது. (ஐ-9)

சகோதரியை வீடியோ எடுத்த நபரை

விசாரிக்கச் சென்ற சகோதரன் கொலை

கொழும்பு, டிசெ.10

சகோதரி குளிப்பதை வீடியோ எடுத்தார் என்று தெரிவிக்கப்படும் நபரை விசாரிக்கச் சென்ற சகோதரர், சந்தேகநபரால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு வனாத்தமுல்லை பகுதியில் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபருக்கு எதிராக சட்டநடவடிக்கை இதுவரை எடுக்கப்பட வில்லை என்று தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் ஒன்றையும் நடத்தினர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-இ)

வெளிநாட்டு தேரர் சடலமாக மீட்பு

காலி, டிசெ.10
காலி - ரத்கம களப்புப் பகுதியில் வெளிநாட்டு தேரர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
கடந்த 3 நாள்களுக்கு முன்னர் இவர் காணாமல் போனமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.
வெளிநாட்டிலிருந்து வருகை தந்து காலி - ரத்கம பகுதியிலுள்ள தபோவனம் ஒன்றில் மத போதனையில் ஈடுபட்ட தேரர் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

கண்டாவளையில் ஈவிரக்கமின்றி பறவை, விலங்குகள் வேட்டை

மக்கள் விசனம்

கிளிநொச்சி,டிசெ.10
கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரி வுக்குட்பட்ட உழவனூர் தம்பிராசாபுரம் காட்டுப்பகுதிகளில், பறவைகள் மற்றும் விலங்குகள் அதிகம் வேட்டை யாடப்படுகின்றன என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சுண்டிக்குளம் பறவைகள் சரணலாயத்துக்கு அருகில் உள்ள இந்த பிரதேசங்களில் அதிகளவு பறவைகள் காலத்துக்குக் காலம் வந்து செல்கின்றன. குறிப்பாக நாரைகள் மற்றும் பெரிய வகை கொக்குகள் இங்கு பருவகால பறவைகளாக வருகின்றன.
இவ்வாறு வருகின்ற பறவைகள் இரவில் வேட்டையாடப்படுகின்றன.
கொக்கு, மயில் மற்றும் விலங்குகள் சுடப்படுகின்ற துப்பாக்கிச் சத்தங்கள் கேட்பதோடு, பறவைகள், விலங்குகளின் அவலச் சத்தங்களும் கேட்கின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.
எனவே உரிய தரப்பினர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு எஞ்சியிருகின்ற பறவைகள் மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (க-214)

மஹய்யாவை பிரதேசத்துக்கு பயணக் கட்டுப்பாடு

கண்டி, டிசெ.10
கண்டி மாவட்டத்தின் மஹய்யாவை பிரதேசத்துக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கண்டி மாநகர ஆணையாளர் அமில நவரத்ன தெரிவித்தார்.
குறித்த பிரதேசத்தில் கொவிட் - தொற்றாளர்கள் 28 பேர் பதிவாகியுள்ளதைத் தொடர்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.
மஹய்யாவை என்பது எமது நகருக்கு சேவை வழங்கும் பெரும்பாலான மக்கள் வாழும் பிரதேசமாகும். அதே போன்று இதற்கு முன்னர் போகம்பரை பிரதேசத்துக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கண்டி மாநகர சபை எல்லைக்குள் பொதுமக்களுக்கும் தொற்றாளர்களுக்கும் இடையிலான தொடர்பு தடுக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

நட்சத்திரக் ஹொட்டலில் அமைச்சர்களுக்கு கடன்

கொழும்பு, டிசெ.10
நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்த பிரபல அமைச்சர்கள் இருவர் பிரசித்தமான நட்சத்திர ஹொட்டலுக்கு மிகப்பெரிய கடனை வைத்துச் சென்றுள்ள தகவல் அம்பலமாகியுள்ளது.
குறித்த இரண்டு முன்னாள் அமைச்சர்களும் சுமார் 54 லட்சத்துக்கும் அதிகமான பணம் சம்பந்தப்பட்ட ஹொட்டலுக்கு செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அந்த இரண்டு முக்கிய புள்ளிகளும் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை.
அவர்கள் இருவரும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

விதையனைத்தும் விருட்சத்தின் தொடரும் நிவாரணப் பணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10
சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வரும் விதையனைத்தும் விருட்சமே அமைப்பினர் தற்போது புரேவி புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
முதற்கட்டமாக இருபாலை, சேந்தாங்குளம்,மானிப்பாய் ஆகிய பகுதியில் 250 பேருக்கு மதிய மற்றும் இரவு உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர்.
தொடர்ச்சியாக மானிப்பாய், குருநகர், ஆறுகால்மடம், வட்டு தெற்கு (இன்பச்சோலை),சேந்தாங்குளம், நவாலி பூம்புகார்,மணியந்தோட்டம், உதயபுரம், பூநாரிமடம், நந்தாவில், வட்டுக்கோட்டை பகுதிகளிலும் பாதிகப்பட்டவர்களுக்கு உணவுப்பொதிகளை வழங்கியுள்ளனர்.
இதுவரை 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார். அத்துடன் நல்லூர் சிவன் கோவிலடி, தெல்லிப்பழை,மாவடி (வட்டுக்கோட்டை) ஆகிய பகுதியில் நுளம்புவலை அடங்களாக 6 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளையும் வழங்கியுள்ளனர். (க)

சமுர்த்தி முன்னேற்ற கலந்தாய்வு

முல்லைத்தீவு, டிசெ.10
முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் - மாந்தை கிழக்கு சமுர்த்தி திணைக்களத்தின் கடந்த கால முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.
இதில் மாவட்டச் செயலர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், பிரதேச செயலாளர் (துணுக்காய், மாந்தை கிழக்கு) உதவிப் பிரதேச செயலர், சமுர்த்தி முகாமை யாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ப-222)

முகமூடி அணிந்த கும்பலால் கடை , வீடுகள் உடைப்பு!!

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிசெ.10
வவுனியா வேலங்குளம் மடுக்குளம் பகுதியில் ஒரே இரவில் இரண்டு வீடுகள் மற்றும் கடை என்பன முகமூடி அணிந்த கும்பலால் உடைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
குறித்த கும்பல் வீடுகளுக்குள் புகுந்து யன்னல்கள் மற்றும் கதவுகளை உடைத்து சேதமாக்கியதுடன், கடைக்குள் நுழைந்து அங்கிருந்த பொருள்களையும் களவாடிச் சென்றுள்ளது.
ஆறு பேர் கொண்ட இக்கும்பல் வருகைதந்து, யன்னலை உடைத்ததுடன் என்னையும் வெளியில் வருமாறு அச்சுறுத்தினர் என்று வீட்டின் உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.
சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ-110)



கொடிகாமம் கச்சாய் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஜேர்மன் நாட்டில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவன் யோகராசா குகராசாவின் நிதி உதவியில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற 5 மாணவர்களுக்கு சைக்கிள்களும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 13 மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் வழங்கப்பட்டன. (ஐ-159)

வடிகாலமைப்பு வசதியை செய்து தந்தாலே போதும்

இளம் தொழில் முயற்சியாளர் உருக்கம்

யாழ்ப்பாணத்தில் இளம் தொழில் முயற்சியாளராக வளர்ந்து வரும் ஸ்ராலினி பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சிறிது சிறிதாக பலவித மூலிகைகள், மரக்கறிகள், தாவரங்கள் மற்றும் ஆடுகள், தாராக்கள் என ஒருங்கிணைந்த இயற்கைப் பண்ணையை உருவாக்கி இருந்தார்.
கடந்த வாரம் உருவான புரேவிப் புயலைத் தொடர்ந்து பலத்த மழைவீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பதிவாகியது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கொக்குவில் பொற்பதி வீதியில் பிள்ளையார் கோவிலுக்கு பின் பக்கமாக உள்ள இவரது பண்ணை நீரில் மூழ்கியது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஸ்ராலினி;
என்னைப்போல் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மரக்கறிப் பயிர்ச்செய்கை என வாழ்வாதாரத்தை நம்பியுள்ள எத்தனையோ குடும்பங்கள் இந்த வெள்ளப்பெருக்கால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தயவுசெய்து எனக்கு வெள்ள நிவாரணம் வேண்டாம். இனி வரும் காலங்களில் இங்கு வெள்ள இடர் ஏற்பாடாதவாறு உரிய வடிகாலமைப்பு வசதிகளை பிரதேச சபை மற்றும் பொறுப்பான அதிகாரிகள் செய்து தரவேண்டும் - என்றார். (ப)

சஜித் மீது சேறு பூசினால் இனிமேல் வழக்குத்தான்

ஐ.ம.ச எம்.பிக்கள் முடிவு

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மீது சேறு பூசும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் அண்மையில் நடந்தது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது. குறிப்பாக சஜித் பிரேமதாச மீதான சேறுபூசல்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்திருப்பதால் இந்த முடிவை அக்கட்சி எடுத்துள்ளது என தெரியவருகின்றது. வழக்கு சார்ந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு கட்சியின் சட்டப் பிரிவை நாடவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர். (ஐ-இ)

முல்லைத்தீவு-இந்துபுரம் கிராம சேவையாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு, கிராமசேவையாளர் ஜெயசீலனின் முயற்சியால், அத்தியாவசிய உடனடி உதவிகள் வழங்கப்பட்டன. (க-6)

தீவிரவாதத் தகவல்களைப் பெற அரச புலனாய்வுப் பிரிவு தயக்கம்

ரி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.10

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு தீவிரவாதம் தொடர்பான தகவல்களை அரச புலனாய்வு சேவைக்கு வழங்குவதற்கு தயாராகவே இருந்தது. எனினும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அரச புலனாய்வுப் பிரிவு தயக்கம் காட்டியது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வின் முன் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த பயங்கரவாத தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நாலக டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸாருக்கு தகவல் வழங்குபவராகச் செயற்பட்ட நாமல் குமார என்பவரை நாம் தொடர்ந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தினோம். இந்த நிலையில் நாமல் குமார ஏன் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்தனவுடன் விரோதத்தைக் கொண்டிருந்தார் என்பது தொடர்பாக நாம் அறியவேண்டி இருந்தது. குறிப்பாக நாமல் குமார வெளியிட்ட குரல் பதிவுகளில் அவர் தெரிவித்த அரச புலனாய்வுத்துறையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்தனா தொடர்பான கருத்துக்கள் செம்மைப்படுத்தப்பட்டு இருந்தன. இந்தக் குரல் பதிவுகள் வேண்டுமென்றே செம்மைப்படுத்தப்பட்டுள்ளன என்று நாம் சந்தேகிக்கின்றோம் - என்றார். (ஐ-இ)

பண்ணை வீதி மதகு பாலமாக அபிவிருத்தி

கிளிநொச்சி,டிசெ.10

கிளிநொச்சி-கனகபுரம் பகுதியில் வெள்ளத்தால் அழிவடைந்த பண்ணை வீதியில் உள்ள மதகை, பாலமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ரிடெவ் திட்டத்தின் கீழ் ஜப்பானின் நிதி உதவியில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ள குழுவினர், பொறியியலாளர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபையினர் குறித்த பகுதியை நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

குறித்த மதகு அண்மையில் பெய்த பலத்த மழை காரணமாக முழுமையாக சேதமடைந்திருந்தது. இதனால் அப் பகுதியைச் சேர்ந்த சுமார் 45 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. (ஐ-6)

வீதியை வெட்டிய நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

சாவ.நகர தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, டிசெ.10

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களின் முன்னுதாரணத்தைப் பயன்படுத்தி வீதியை வெட்டிய டச்சு வீதி வாசிக்கு எதிராக நகர சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தவிசாளர் தெரிவித்தார்.

புரேவிப் புயல் மற்றும் பெருமழை காரணமாக நகரசபையின் அனைத்துப் பகுதிகளிலும், வெள்ளம் தேங்கி நிற்கின்றன. வெள்ளம் வெளியேற்றுவது தொடர்பாக முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் கனரக வாகனம் மூலம் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு வெள்ளம் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள வீதிகளை வரியிறுப்பாளர்கள் எவரும் வெட்டவேண்டாமென நகரசபையின் தவிசாளர் அறிவித்துள்ள நிலையில் நேற்று வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான. டச்சு வீதியை வெட்டி வெள்ளத்தை வெளியேற்றிய நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தவிசாளர் அறிவித்துள்ளார். நகரசபையின் வாகனமும் தொழிலாளர்களும் தயார் நிலையில் உள்ளதால் வீதிகளை வெட்டி பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்க வேண்டாமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ப-9)

மருந்து காரணமாக

பார்வையிழந்த மேஜருக்கு இழப்பீடு வழங்க உத்தரவு

கொழும்பு, டிசெ.10

மலேரியா நோய்க்காக வழங்கப்பட்ட மருந்து காரணமாக முழுமையாகக் கண்பார்வையை இழந்த இராணுவ மேஜர் ஒருவருக்கு இழப்பீட்டை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளது.

தெஹிவளை - தொடரூந்து நிலைய வீதியைச் சேர்ந்த குறித்த மேஜர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நிறைவடைந்து தீர்ப்பை வழங்கும்போதே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மஹிந்த சமயவத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன உள்ளிட்ட மூவர் பெயரிடப்பட்டிருந்தனர். சேவையில் ஈடுபட்டிருந்தவேளை மலேரியா நோய்க்காக வழங்கப்பட்ட மருந்தின் பக்க விளைவு காரணமாக தான் கண்பார்வையை இழந்துள்ளேன் என 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். (ப)

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரி கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த குருதிக்கொடை நிகழ்வு நேற்று மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது. மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்கினர். (ஐ-20)

பேலியகொட மீன் சந்தையை திறக்க துரிதமாகச் செயற்படுக

பசில் ராஜபக்ச பணிப்பு

கொழும்பு, டிசெ.10

சுகாதாரத் துறையால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கடைப்பிடித்து பேலியகொட மீன் சந்தையைத் திறப்பது தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதானமாக மீன் சந்தையின் வெளியேறும் வாயில் மற்றும் சாலையைச் சீரமைக்கும் பணிகளை விரைவில் நிறைவு செய்யவேண்டும் சந்தை வளாகத்தில் பறவைகளால் ஏற்படும் மாசைத் தடுப்பதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளவேண்டும்.

பேலியகொட நகர சபையில் போதிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இல்லாவிடின், ஓய்வு பெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை இணைத்துக் கொண்டு மீன் சந்தையின் சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதையும், கண்காணிப்பதை மேலும் வலுப்படுத்தவேண்டும் - என்றார். (ப)

மாகாண சபைத் தேர்தலை நடத்த அரச தரப்பு முஸ்தீபு

கொழும்பு, டிசெ.10

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையிலாவது விரைவில் நடத்த தேர்தல் ஆணைக்குழுவிடம் பேச்சு முன்னெடுக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் மாகாண சபை உறுப் பினர்களுடன் நேற்று கொழும்பில் இடம்பெற்ற பேச்சின்போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடும் நோக்கில் தேர்தல் முறைமை தொடர்பான சட்டத்தை இயற்றியது. மாகாண சபைகளின் பதவிக் காலம் நிறைவு பெற்று இரண்டரை வருட்காலமாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபை நிர்வா கம் முன்னெடுக்கப்படுகின்றது. இதனால் பலதரப்பட்ட வழிகளில் மக்கள் நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளார்கள். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள சட்டச் சிக்கல்களுக்கு தீர்வுகண்டு பழைய தேர்தல் முறை மையிலா வது தேர்தலை விரை வாக நடத்த தேர்தல் ஆணைக்கு முவிடம் பேச்சு முன்னெடுக்கப்பட வுள்ளது - என்றார். (ப)

சுனாமியில் காணாமல்போன மகன்; உரிமைகோரி இரு தாய்மார் வழக்கு

ஜனவரியில் மரபணு பரிசோதனை

கொழும்பு, டிசெ.10

சுனாமியில் காணாமல் போன ஒருவருக்கு இரு தாய்மார்கள் உரிமை கோரும் வழக்கு நேற்றுமுன் தினம் சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம் றிஸ்வி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக் கைகள் பிற்போடப்பட்டுள்ளதுடன், வழக்கு எதிர் வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது மகனுக்காக ஏங்கும் இரு தாய்மார் களும் நீதிமன்றத்துக்கு வருகை தந்ததுடன் தாய் மாரின் கோரிக்கையை ஏற்று மரபணு பரிசோத னையை நேற்றுமுன்தினம் மேற்கொள்வதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலை கருத்திற்கொண்டு மரபணு பரிசோதனை தொடர்பில் பின்னர் அறி விக்கப்படும் என தெரிவித்த சம்மாந்துறை நீதி மன்ற நீதிவான் எம்.ஐ.எம் றிஸ்வி, வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (ப)

சிறப்பாக நடைபெற்ற சிறுமியர் தின நிகழ்வு

வவுனியா,டிசெ.10

சர்வதேச சிறுமியர் தின நிகழ்வு வவுனியா கோவில் குளம் அருளகம் சிறுவர் இல்லத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவு னியா அலுவலகத்தின் ஏற்பாட்டில் "பாரபட்சமற்ற சமத்துவ உலகை கட்டியெழுப்புவோம்"எனும் தொனிப் பொருளில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட் டச் செயலர் சமன் பந்துலசேன கலந்துகொண்டார்.

அருளகம் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களால் கலை, கலாசார நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

மேலும், நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை யின் உத்தியோகத்தர் நந்தசீலன், மாவட்ட சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரி ஜெயகெனடி, அருளகத் தின் முக்கியஸ்தர் ஆ.நவரத்தினராசா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

வேலணை பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகப் பகுதியில் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பிரதான வீதியில் கடற்கரை ஓரமாக வீசப்பட்டிருந்த பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடிக் கழிவுகள் வேலணை பிரதேச சபையால் நேற்றுமுன்தினம் சிரமதானம் மூலமாக அகற்றப்பட்டிருந்தது. (ப)

கிளி.மாற்றுத் திறனாளிகளின் உற்பத்தியை விற்க நிலையம்

கரைச்சியில் அமைப்பு

கிளிநொச்சி, டிசெ.10

கரைச்சி மாற்றுத்திறனாளிகள் அமைப்பால் உள் ளூர் உற்பத்தி பொருள்களை விற்பனை செய் வதற்கான நிலையம் ஒன்று அமைக்கப்பட் டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் தமது தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அவர்கள் மேற்கொள்ளும் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற வகையில் இந்த நிலையம் அமைக்கப்பட் டுள்ளது.

இதற்கான நிதியுதவியை ஜேர்மன் விக்டரி சீட்ஸ் பவுன்டேசன் அமைப்பு வழங்கியுள்ளது.(ஐ-222)

நான்கு வீடமைப்பு கருத்திட்டம்;

பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, டிசெ.10

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நடை முறைப்படுத்தப்பட்ட நான்கு வீடமைப்பு கருத் திட்டங்களுக்கு பணம் செலுத்தும் பொறி முறையை திருத்தம் செய்ய பிரதமர் முன் வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட வீடமைப்புக் கான ஒரு கருத்திட்டத்துக் காக 300 மில்லியன் ரூபா வீதம் 4 கருத்திட்டங் களை மேற்கொள்வதற் காக இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்கியுள்ளது டன், குறித்த திட்டம் தேசிய வீடமைப்பு அதிகார சபை யால் முன்னெடுக்கப்படு கிறது.

பயனாளிகள் குறித்த கட் டுமானப் பணிகளுக்கான செலவுகளை கட்டம் கட்ட மாகப் பூர்த்திசெய்த பின் னர் தேசிய வீடமைப்பு அதிகாரசபை மூலம் இந் திய உயர் ஸ்தானிகரால யத்துக்கு சமர்ப்பிக்கும் முன்னேற்ற அறிக்கை யின் பிரகாரம் குறித்த பணத்தை செலுத்து வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்கொள்வதற்கு குறித்த பணத்தொகை பயனாளிகளிடம் இல் லாத காரணத்தால் திட்டத் தின் முன்னேற்றம் குறை வடைந்தது. அதனால் வீடமைப்பு திட்டம் ஆரம் பிக்கும் போதே குறித்த கட்டத்துக்கான தவணைக் கொடுப்பனவை செலுத்து வதற்கும், அதன் பின்னர் கட்டுமானத்தின் முன் னேற்றத்திற்கமைய தவ ணைக் கொடுப்பனவு களை விடுவிப்பதற்கும், இந்திய உயர்ஸ்தானிகரா லயம் உடன்பாடு தெரி வித்துள்ளது என்று தெரி விக்கப்படுகிறது. (ப)

வங்கிக் கணக்கு விவரத்தை வெளியிடுங்கள் பார்ப்போம்

லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி ஆளுங்கட்சிக்கு சவால்

கொழும்பு, டிசெ.10

நாடாளுமன்றத்தில் வங்கிக் கணக்கு சொத்து விவரத்தை வெளிப்படுத்திய ஒரே நபர் நான் மட்டுமே, தைரியம் இருப் பின் ஆளும் கட்சியின் ஒரு உறுப்பினரேனும் தனது வங் கிக் கணக்கில் உள்ள பணம் எவ்வளவென இந்த சபையில் வெளிப்படுத்துங்கள் பார்க்க லாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரி யெல்ல ஆளும் தரப்பினருக்கு சவால் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல உலக நாடாளுமன் றத்திலேயே எனது சாதனை ஒன்று உள்ளது. எமது ஆட்சி யில் 2017 ஆம் ஆண்டு பெருந்தெருக்கள் அமைச்சின் வேலைத்திட்டம் குறித்து ஜே. வி.பியினர் குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தனர். எனினும் 2017 ஆம் ஆண்டில் எனது வங்கிக்கணக்கில் உள்ள பணம் எவ்வளவு என்பதை நான் இந்த நாடாளுமன்றத் தில் வெளிப்படுத்தினேன். வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினராலும் இவ்வாறு தமது வங்கிக் கணக்கில் உள்ள பணத்தொகையை வெளிப்ப டுத்த முடியுமா? சட்டரீதியாக சம்பாதித்த பணத்தில் ஏன் எவ ருக்கும் காட்ட வேண்டும் என எனது மனைவி என்னை திட்டி னார். நாம் அரசியலில் ஊழல் செய்ய வேண்டும் என்ற நோக் கத்தில் அரசியல் செய்ய வில்லை, பரம்பரை பரம்பரை யாக நாம் சொத்துகளை நேர் மையாக சம்பாதித்து வைத் துள்ளோம்.

தைரியம் இருப்பின் ஆளும் கட்சியின் ஒரு உறுப்பினர் தனது வங்கிக்கணக்கில் உள்ள பணத்தை இந்த சபையில் வெளிப்படுத்துங்கள் பார்க்க லாம் - என்றார். (ப)

2025 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் குடிதண்ணீர்

அமைச்சர் வாசுதேவ உறுதி

கொழும்பு, டிசெ.10

2025 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் குடிதண்ணீரை வழங்குவதே எமது இலக்கா கும். அதனை அடைவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித் தார்.

நீர் வழங்கல் அமைச்சின் 2021 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆராயும் மீளாய்வுக் கூட்டம் நீர் வழங்கல் அமைச்சில் நேற்று இடம் பெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது திட்டங்களை பணயக்கைதி களாக வைத்திருக்க ஒப்பந்தக்கா ரர்களுக்கு இடமளிக்கமாட்டோம். அவர்களின் எந்தவொரு கோரிக் கைக்கும் செவிசாய்க்க நாம் எப் போதும் தயாராகவே உள்ளோம். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நீரை வழங்குவதே எமது தேவையாகும். இதற்காக, இரா ஜாங்க அமைச்சர் உள்ளிட்ட எமது அனைத்து அதிகாரிகளும் முழு அர்ப்பணிப்புடனும் உறுதியுடனும் பணியாற்றி வருவதுடன், 2025 ஆம் ஆண்டுக்குள் அனைவருக் கும் குடிதண்ணீர் வழங்கும் எமது முதன்மை நோக்கத்தை அடைய எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டு வருகின்றோம் - என் றார். (ப)

கூட்டுக்குள் புகுந்தது வெள்ளம்; செத்து மடிந்தன 125 கோழிகள்

கொடிகாமம், டிசெ.10

கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஆத்தியடிப் பகுதியில் வெள்ளம் புகுந்ததால் கோழிக் கூட்டுக்குள் காணப்பட்ட 125 கோழிகள் இறந்துள்ளன என்று உரிமையாளர் தெரிவித்தார்

திடீரென புகுந்த வெள்ளம் கோழிக் கூட்டை நிறைத்ததால் அதற்குள் காணப்பட்ட கோழிகள் காலையில் இறந்த நிலையில் காணப்பட்டன என கவலையுடன் தெரிவித்த அவர் வழ்வாதாரத்தை ஈடுசெய்வத்கு உரியவர்கள் உதவிகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ப-159)

யக்கலவில் 3 கட்டங்களாக வீடுகளை கட்ட நடவடிக்கை

அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10

நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் யக்கல, வெரல்லவத்த பிரதேசத்தில் 500 வீடுகளைக் கொண்ட மத்தியதர வகுப்பினருக் கான வீடமைப்புத் திட்டம் 3 கட் டங்களாக நடைமுறைப்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முதற்கட்டமாக 12 மாடிகளைக் கொண்ட 600 சதுர அடிகள் கொண்ட 132 வீட்டு அலகு களும், 900 சதுர அடிகளைக் கொண்ட 22 வீட்டு அலகுகளு மாக 154 வீடுகளை அமைப்பதற் குத் தேவையான ஆரம்ப நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. கருத்திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ஆயிரம் 503.30 மில்லியனா கும், கட்டுமானத்துக்கான செல வுகள் முன் விற்பனைத் தொகை மூலம் பெறுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. அதற்கமைய, முன் மொழி யப்பட்டுள்ள கருத்திட் டத்தை நடைமுறைப்படுத்துவதற் காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரத மர் மஹிந்த ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (ப)

புத்திகவுக்கு மற்றுமொரு பதவி

கொழும்பு, டிசெ. 10

பொலிஸ் பொது மக்கள் உறவுகள் மற்றும் ஊடகப் பிரிவின் பதில் பணிப் பாளராக பொலிஸ் அத்தியட்சர் புத் திக மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரம ரத்னவால் அவர் இவ்வாறு நியமிக் கப்பட்டுள்ளார். பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு புதிய பணிப்பாளர் நியமிக் கப்பட்டாலும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் தொடர்ந்தும் அஜித் ரோஹண செயற்படுவார் என பொலிஸ் தலைமையகம் தெரி வித்தது. (ப)

மக்கள் முறையிட்டால் நிதியை ஒதுக்கலாம்

கொடிகாமம், டிசெ.10

மக்கள் முறையிட்டால் நிதியை ஒதுக்கி வெள்ளம் வழிந்தோடுவதற்கான வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மழை பெய்யும் வேளையில் கொடிகாமம் மடத்தடி வீதியில் நீண்ட நாள்களாகத் தேங்கி நிற்கும் வெள் ளத்தை வெளியேற்றுவது தொடர்பாகவே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

புரேவிப் புயல் மற்றும் தொடர் மழையால் குறித்த பகுதியில் வெள்ளம் வெளியேற முடியாமல் இருப்ப தால் மடத்தடி வீதியில் உள்ள குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன. குறித்த பகுதிக்கு வந்த மாவட்ட இடர் முகாமைத்துவ அலகின் பணிப்பாளர் இவ் இடத்தைப் பார்வையிட்டார். வெள்ளம் வழிந்தோடுவது தொடர் பாக அனைவரும் மாவட்டச் செயலகத்துக்கு முறை யிட்டால் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தரப்படும் என அவர் மக்களுக்குத் தெரிவித்தார். (ப-159,9)

கொரோனா பாதுகாப்பு கருதி பாடசாலையில் சுகாதார அறை

முல்லைத்தீவு,டிசெ.10

முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் மக ளிர் பாடசாலையில் மாணவர்களுக்கான சுகாதார அறை நேற்று திறக்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் தாக் கத்தைக் கருத்தில் கொண்டு மாணவர்க ளின் சுகாதார நலன் கருதி இந்த சுகாதார அறை அமைக்கப்பட் டுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோ தரி ஏ.எம்.ஜெ. நீற்றா தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல் லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் கலந்துகொண் டார்.

மேலும் நிகழ்வில் கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் எம். உமாமகள், முல்லை வலயக்கல் விப் பணிப்பாளர் உமாநிதி புவன ராஜா,கோட்டக்கல்வி அதிகாரி ரி.ஸ்ரீ.புஸ்பநாதன், கிராம அலு வலர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். யு.எஸ்.ஏ.ஐ.டி நிறுவனத்தின் நிதி உதவியில் இந்த சுகாதார வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது. (ஐ- 19)

வவுனியாவில் கடும் பனி மூட்டம்

வவுனியா, டிசெ.10

வவுனியாவில் கடும் பனிமூட்டம் காணப்படுவ தால் வீதிகளால் பயணிப்பதில் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழை காணப்பட்டு நேற்றுமுன்தினம் முதல் வெயில் எறித்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை 8 மணிவரை கடும் பனிமூட்டம் காணப்பட்டது. வவுனியாவில் நொச்சிமோட்டைப் பாலம், மன் னார் வீதி உட்பட பல வீதிகளில் திருத்தப் பணி கள் இடம்பெறுகின்றன அங்கு பொலிஸாரோ பணியாளர்களோ கடமையில் இல்லை. இதே வேளையில் கால்நடைகள் வீதிகளுக்கு குறுக்கே காணப்பட்டதால் பாடசாலை மாண வர்கள், தொழிலுக்குச் செல்வோர் உட்பட பல ரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட னர். (ப-402,18)

மஹர கலவரம்:

165 நபர்களிடம் அறிக்கைகள் பதிவு

கொழும்பு,டிசெ.6

மஹர சிறைச்சாலை கலவரம் தொடர் பாக 165 நபர்களிடமிருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கைகளை பதிவு செய்துள்ளனர் என பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊட கப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறைக்கைதிகள், சிறைச்சாலை அதிகா ரிகள், மருத்துவர்கள் மற்றும் ஆண் தாதியர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங் களின் அடிப்படையிலேயே இவ்வாறு அறிக்கைகள் பதிவுசெய்யப்பட்டுள் ளன.

நவம்பர் 29 ஆம் திகதி ஏற்பட்ட அமைதி யின்மையில் 11 கைதிகள் உயிரிழந்தது டன், அவர்களில் எட்டுப் பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

25 அதிகாரிகள் அடங்கிய குற்றப் புல னாய்வுத் துறை அதிகாரிகள் இது தொடர்பான விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர் - என்றார். (ஐ-இ)

டிசெம்பர் 10
மனித உரிமைகள் தினம்

வாழ்க்கையை அனுபவிப்பதற்கு கட்டாயமான மனித உரிமைகள்

அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

சி.நற்குணலிங்கம்

மதிப்பான சமூக வாழ்க்கையை அனுபவிப்பதற்கு ஒரு மனிதனுக்கு மனித உரிமைகள் கட்டாயமாக இருக்க வேண்டியது அவசியம். மனித உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியாத, சமுதாயத்திலோ, நாட்டிலோ மனிதன் சிறப்புற வாழ்வதும், மகிழ்வாக வாழ்வதும், பூரண அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்வதும் கடினமானதாகவே இருக்கும். ஆரோக்கியமான அறிவுடன் கூடிய அமைதியான தேசம் உருவாக, மனித உரிமைகள் பற்றி சிறுவர் முதல் முதியோர் வரை ஒவ்வொவரும் அறிந்திருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

மனித உரிமைகள்

மனித உரிமை (Human rights) என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப் பெறவேண்டிய மற்றும் உரித்தான அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் ஆகும். உணவு, உடை, உறையுள் தொடர்பான அடிப்படைத் தேவைகளின்றி மனிதன் வாழ முடியாது. அதனால் நாட்டின் மூலச்சட்டங்களையும் கருத்தில் கொண்டு மனித உரிமைகள் வடிவமைக்கப்படுகின்றன. இன, மத, பால் வேறுபாடுகளின்றி ஒவ்வொரு தனிமனிதருக்கும் இருக்கும் அடிப்படை உரிமைகள் அவசியமான உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

பதிவான நாள்

1525 ஆம் ஆண்டில் விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக ஜேர்மனியில் வெளியிடப்பட்ட "கறுப்புக் காட்டின் பன்னிரண்டு அம்சங்கள்"(Twelve artivles of the black forest) என்னும் ஆவணமே ஐரோப்பாவின் முதல் மனித உரிமை தொடர்பான பதிவு எனலாம். 1776 இல் ஐக்கிய அமெரிக்காவிலும், 1789 இல் பிரான்ஸிலும் நிகழ்ந்த முக்கிய புரட்சிகளின் விளைவாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் பல அடிப்படை உரிமைகளை சட்டத்தில் இடம்பெறச் செய்தன.முதலாம் உலகப் போரின் பின்னர் 1919 இல் சர்வதேச சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் பட்டயத்தில், சங்கத்தால் முன்னெடுக்கப்பட வேண்டிய பல உரிமைகள் குறித்த ஆணைகள் வழங்கப்பட்டிருந்தன. இவை இன்றைய மனித உரிமைகள் அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டன. 1945 இல் இரண்டாம் உலகப் போரின் விளைவாக உலகப் பாதுகாப்பு அரணாக ஐக்கிய நாடுகள் சபை உரு வாக்கப்பட்டது. மனித உரிமைகள் சட்டம் தொடர்பில் இந்த அமைப்பு பெரும்பங்காற்றியுள்ளது. 1948 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையில் 30 பிரிவுகளைக் கொண்ட உலக மனித உரிமைகள் சான்றுரை (universal declaration of human rights)ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனித உரிமைகள் தினம்

டிசெம்பர் 10.1948 ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உலகளாவிய பிரகடனத்துக்கு 48 நாடுகளின் ஆதரவான வாக்களிப்புடன், சர்வதேச மனித உரிமைகள் தினமாக டிசெம்பர் 10 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. 1950 ஆம் ஆண்டு முதல் டிசெம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையைப் பெறுவதும், ஏனைய மனிதரையும் வாழவிடும் நெறிமுறையை உணர்த்துவதே இந்நாளின் முக்கிய நோக்கமாகும். அனைத்து மனிதர்களும்,சுதந்திரமானவர்களாகவும், உரிமையிலும் கண்ணியத்திலும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை வலியுறுத்துகிறது.

மனித உரிமைகள் குடியியல், அரசியல், பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. வாழும் உரிமை, உணவுக்கான உரிமை, நீருக்கான உரிமை, பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், தகவல், மதம் என எமக்கான உரிமைகள் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த உறுப்புரைகளை மீற எந்த நபருக்கோ அல்லது நாட்டுக்கோ உரிமை கிடையாது. மனித உரிமைகள் பிரகடனத்தில், "அனைத்து மக்களும், குழுக்களும் சுயநிர்ணய உரிமை இருப்பதால், அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தை சுயமாகத் தீர்மானிப்பதுடன் தமது சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திகளைச் சுயமாக முன்னெடுக்கலாம்"என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பிரகடனத்தில் உள்ள விடயங்களை உறுப்பு நாடுகள் முழுமையாகப் பின்பற்றாத காரணத்தால், 1966 இல் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் மற்றும் சமூக பொருளாதார,கலாசார உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் ஆகிய இரண்டும் ஐ.நா. சபையால் கொண்டு வரப்பட்டன.

இலங்கை விதிவிலக்கல்ல

நாடுகளுக்கிடையிலான போர், உள்நாட்டு மோதல்கள், வர்த்தகப் போராட்டங்கள் நிகழும் சந்தர்ப்பங்களில் அநேகமான மனித உரிமைகள் பல நாடுகளில் மீறப்பட்டுள்ளன. மீறப்படுகின்றன. இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல. ஒவ்வொருவரும் தம் உரிமைகளை தாம் மதித்து நடப்பதுடன், பிறரது உரிமைகளையும் மதித்து நடக்க வேண்டும். இதனை சட்டங்களால் மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியாது. அனைவரதும் மனப்பாங்கிலும் எதுவித வேறுபாடுகளின்றி மாற்றம் ஏற்படவேண்டும். மனித சமுதாயம் எவ்வளவு தூரம் நாகரிகத்தில் முன்னேறிய போதும் அதே அளவுக்கு உரிமைகள் மீறப்படுவதை நாம் அறிவோம். எழுத்துருவில் உள்ள உரிமைகள் எந்தளவுக்கு நடைமுறையில் உள்ளது என்பது கேள்விக்குறி?

இன, மத, பால் வேறுபாடுகளின்றி ஒவ்வொரு தனிமனிதருக்கும் இருக்கும் அடிப்படை உரிமைகள் அவசியமான உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

கட்டுநாயக்கவைத் திறப்பதாயின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தேவை

கொழும்பு, டிசெ.10

கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்து விடுவது தொடர்பில் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று பொதுச் சுகாதார அதிகாரிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து அதன் பின்னர் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்குள் வரவழைப்பது தொடர்பில் முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் செயலாளர் எம். பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்குள் வரும் முக்கியஸ்தர்கள் தொடர்பில் உரிய முறையில் அவர்களுக்கு இலங்கையின் சட்ட திட்டங்கள் உணர்த்தப்பட வேண்டும். அத்துடன் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முழுமையாக கொரோனாத் தொற்று இல்லை என்ற சான்றிதழ் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேநேரம் நாட்டுக்குள் சுற்றுலா பயணிகள் வருகை தந்த பின்னர் அவர்களின் நடமாட்டங்கள் அதிகாரிகளால் முழுமையாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்றார். (ஜ-இ)

இன்றைய நாள்

மேடம்: திட்டமிட்ட விஷயத்தில் வெற்றி பெறுவீர்கள். திடீர் வரவு உண்டு. சிக்கலின் போது உடன் பணிபுரிபவர்கள் உறுதுணையாக இருப்பர். வீடு மற்றும் மனைகளைப் புதுப்பித்து மாறுதல் செய்வீர்கள்.

இடபம்: புதிதாக திருமணமானவர்களுக்கு புத்திரப்பேறு உறுதியாகும். பணியாளர்களிடையே நல்லுறவு ஏற்படுவ தால் நிம்மதி வரும்.வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

மிதுனம்: மேலதிகாரியின் கடுமையான போக்கு மெல்ல மாறும். வியாபாரிகள் முன்பை விட அதிக லாபம் பெறுவார்கள் பெண்களுக்கு குழப்பமாக இருந்த மனநிலை மாறும்.

கடகம்: உங்கள் செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும். முன் யோசனையுடன் திட்டமிடுவது நல்லது. மனஉறுதி கூடுதலாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை எதிர் பார்க்கலாம்.

சிம்மம்: புதிய நண்பர் கிடைப்பார். அலுவலகத்தில் இருந்த குழப்பம் நீங்கும். பணியிடத்தில் திறமையை பயன்படுத்திப் பாராட்டுப் பெறுவீர்கள். தியானம், தெய்வ வழிபாடு மனதுக்கு புத்துணர்வு தரும்.

கன்னி: திடீர் சுபச்செலவுகளால் சிலருக்கு கையிருப்பு குறையும். வேலை பற்றிய முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. சிறு வயது வகுப்பு நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

துலாம்: தேவையற்ற சந்தேகங்களால் நிம்மதி இழக்க வேண்டாம். செயல் திறன் மேலும் அதிகரிக்கும். புதிய விஷயங்கள் கற்பீர்கள். முன்னேற்றத்தைக் காண உள்ளீர்கள்.

விருச்சிகம்: உங்கள் துறையில் உதவும் ஒருவரின் உதவி கிடைக்கும். பெண்கள் தனலாபம் பெற அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதால் உங்களின் புகழ் கூடும்.

தனுசு: தந்தையின் செயல்பாடு காரணமாக மேன்மை அடைவீர்கள். பணியாளர்கள் ஓய்வில்லாமல் கூடுதலாக உழைப்பீர்கள். பொருளாதார முன்னேற்றம் சிறப்படையும்.

மகரம்: ஆடம்பர செலவுகள் குறைந்து சேமிப்பு உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் கூடிவர வாய்ப்பு உண்டு. கடன் வாங்குவதை முற்றிலுமாகத் தவிர்ப்பது நல்லது.

கும்பம்: அடுத்தவர்களின் குணம் அறிந்து உதவி செய்வது நல்லது. சற்றும் எதிர்பாராதவர் மூலம் உதவி பெறும் வாய்ப்பு நேரலாம்.

மீனம்: உடல்நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குடும்பத்தினருடன் அதிகம் விட்டுக்கொடுத்துச் செல்வீர்கள். நன்மைகள் ஏற்படுவதால் மகிழ்வு கிடைக்கும்.நிம்மதி மீளும்.

எச்சரிக்கையுடன் செயற்படாவிடின் உயிர் ஆபத்துக்கள் ஏற்படலாம்

கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி

கொழும்பு, டிசெ.10

மக்கள் இந்த நெருக்கடியான தருணத்தில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனாவை குணப்படுத்தும் மருந்து என தெரிவித்து வழங்கப்பட்ட மருந்தைப் பெறுவ தற்காக ஒரே இடத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் கூடியதால்

கேகாலைக்கு ஆபத்து ஏற்பட்டுள் ளது. பொதுமக்கள் மிகப்பெரிய ஆபத்தான நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளனர்.

இந்த மருந்து கொரோனாவை குணப்படுத்தக்கூடியது என்பது இன்னமும் விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படவில்லை. சோதனைகள் மற்றும் ஆய்வுகள் இடம்பெறுகின்றன. இந்த மருந்து கொரோனாவை குணப்படுத்தக்கூடியது என்பது நிரூபிக்கப்பட்டால் நாங்கள் மக்களுக்கு அறிவிப்போம். அதுவரை பொதுமக்கள் பொறுமை காக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

வடக்கு – கிழக்கில் மழைக்குச் சாத்தியம்

கொழும்பு, டிசெ.10

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்துடன், மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றானது கிழக்கு திசையிலிருந்து 30-40 கிலோ மீற்றர் வேகத்துடன் வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது 20 -30 கிலோ மீற்றர் வரை மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும்.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் சாதாரண அலையுடன் காணப்படும். (ந)

நிபுணர் குழாம் முன்னிலையில் கைதிகளின் பிரேத பரிசோதனை

கொழும்பு, டிசெ.10

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்த கைதிகளின் பிரேத பரிசோதனையை நிபுணர் குழாம் முன்னிலையில் மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களமும் பாதிக்கப்பட்டோர் தரப்பினரும் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின்போது உயிரிழந்த 11 கைதிகளின் பிரேத பரிசோதனை மூன்று சட்ட வைத்திய அதிகாரிகள், அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் துப்பாக் கிகள் தொடர்பான நிபுணர் ஒருவர், தடயவியல் ஆய்வு நிலையத்தின் வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட நிபுணர் குழாம் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இவ் இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிபுணர்களின் பெயர் பட்டியலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு வத்தளை நீதவான் புத்திக ஸ்ரீ ராகல சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். (ந-இ)

வெளிநாடுகளில் சிக்கியிருப்போர் விரைவில் தாயகம் திரும்புவர்

விமான சேவைகள் இராஜாங்க செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10

நாடு திரும்பும் எதிர்பார்ப்புடன் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் விரைவில் நாட்டுக்கு அழைத்துவரப்படுவர் என விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்திக்கான இராஜாங்க செயலாளர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களில் சுமார் 40 ஆயிரம் பேர் நாடு திரும்பும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

கொரோனாத் தொற்றால் வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களில் சுமார் 50 ஆயிரம் பேர் இதுவரை நாடு திரும்பியுள்ளனர்.

ஏனையவர்களையும் சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைய விரைவாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையர்கள் தற்போது நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

ஏனைய நாடுகளில் உள்ளவர்களையும் விரைவில் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

அப்பாவை சந்திக்கவரும்போது கலையரசனையும் கூட்டி வாருங்கள்

மஹிந்த – சார்ள்ஸ் உறவை அம்பலப்படுத்திய நாமல்

கொழும்பு, டிசெ. 10

நீங்கள் என் தந்தையாரை சந்திக்க அடிக்கடி வீட்டுக்கு வருவீர்களல்லவா? அப்படி வரும்போது அந்த நாடாளுமன்ற உறுப்பினரையும் (கலையரசன்) கூட்டிக் கொண்டு வாருங்கள். பேசுவோம் என்று விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனுக்குப் பதிலளித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், அரசின் ஒரு லட்சம் கிலோ மீற்றர் பாதை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தில் ஒரு கிலோமீற்றர் பாதை கூட செப்பனிடப் படவில்லை என குற்றஞ்சுமத்தினார். மேலும், அம்பாறை மாவட்ட கிராம பகுதிகள் அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய அமைச்சர் நாமல் ராஜபக்ச, 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை, அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு தடுத்து நிறுத்தியிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வீதிகளை உள்ளடக்கியே, ஒரு லட்சம் கிலோமீற்றர் பாதை அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும். எந்தவொரு விதத்திலும், வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை புதிய அரசு கைவிடவில்லை.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை, தற்போதைய அரசு தொடர்ந்து முன்னெடுக்கும், என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன் கூறுவது என்னவென்றால், இவரது பிரதேசத்தில் ஒரு லட்சம் கிலோமீற்றர் காப்பெட் பாதை அபிவிருத்தித் திட்டம் அரசியல் ரீதியாகவே முன்னெடுக்கப் படுகிறது. இவரது பிரதேசத்தில் உள்ள பாதைகளில், 10 - 15 கிலோ மீற்றர்களை யேனும் புனரமைத்துத் தாருங்கள், என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ச, அந்த குறைபாடுகள் குறித்துப் பேசுவோம்.

நீங்கள் என் தந்தையாரை (பிரதமர் மஹிந்த ராஜபக்ச) சந்திக்க அடிக்கடி வீட்டுக்கு வருவீர்களல்லவா? அப்படி வரும்போது அந்த நாடாளுமன்ற உறுப்பினரையும் (கலையரசன்) கூட்டிக்கொண்டு வாருங்கள். பேசுவோம்.' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

கடற்படை வீரர்கள் 1,795 பேருக்கு பதவி உயர்வு!

கொழும்பு, டிசெ.10

இலங்கை கடற்படையின் 66 அதிகாரிகள் உட்பட மொத்தம் ஆயிரத்து 795 கடற்படை வீரர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ற-இ)

பொலிஸ் தலைமையகத்தில் மூவருக்கே தொற்று

அஜித் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10

பொலிஸ் தலைமையத்தில் மூன்று அதிகாரிகள் மாத்திரமே தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். அங்கு கடமையாற்றும் 150 அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என வெளியாகியுள்ள செய்தியில் உண்மையில்லை என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

அரசியல் பழிவாங்கல்கள்; அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, டிசெ.10

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கையளித்தார்.

மூன்று பேர் கொண்ட இந்த ஆணைக்குழு 2020 ஜனவரி 9 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. 2015 ஜனவரி 8 முதல் 2019 நவம்பர் 16 வரை அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பின்னணி தொடர்பில் விசாரணை செய்யும் பொறுப்பு இதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. செய்தித்தாள் விளம்பரத்தின்படி கிடைக்கப்பெற்ற 1971 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிடம் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வறிக்கை 3 தொகுதி கள் மற்றும் 2 ஆயிரத்து 43 பக்கங்களைக் கொண்டுள்ளது. (வ-இ)

பண்டிகைக் காலத்தில் பயணத் தடை இறுக்கம்

கொழும்பு, டிசெ.10

கொரோனாப் பரவல் அச்சுறுத்தல் மிகவேகமாக அதிகரித்துள்ளமையால் தற்போது அமுலிலுள்ள பயணத் தடையை பண்டிகை காலத்தில் கடுமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மக்கள் தாமாகவே பயணங்களை கட்டுப்படுத்திக்கொள்வது சிறந்தது. பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் அதிகளவில் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பில் சுகாதார தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர். கொரோனாப் பரவலை வெகுவிரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

மனைவியைத் தாக்கிவிட்டு தப்பியோடிய கணவன் கைது!

மட்டக்களப்பு,டிசெ.10

கணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகிய மனைவி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறைக்கு சென்று திரும்பிய ஒருவரே இவ்வாறு மனைவி மீது கத்திக்குத்து நடத்திவிட்டுத் தப்பியோடி யுள்ளார்.

தலை மறைவாகியிருந்த குறித்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ற)

தொற்றால் உயிரிழந்தால் அரச செலவில் அடக்கம்

கோத்தா உத்தரவு

கொழும்பு, டிசெ.10

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தால் இன, மத, பேதமின்றி சகலருக்கும் அரச செலவில் இறுதிக் கிரியைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய செலவுகளுக்கான கொடுப்பனவை அனர்த்த முகாமைத்துவ [illegible] வழங்கவுள்ளது என தெரிவித்துள்ளது. (வ)

ஆயுர்வேத பானத்துக்கு அனுமதி வழங்கவில்லை

சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10
கேகாலை – ஹெட்டிமுல்ல வைத்தியரின் மருந்துக்கு (ஆயுர்வேத பானம்) அனுமதியோ அங்கீகாரமோ வழங்கவில்லை என சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

குறித்த மருந்தை சோதனைக்கு உட்படுத்தி அனுமதி வழங்கப்பட்டதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத், சுகாதார அமைச்சின் உணவு அதிகாரசபையோ அல்லது மருந்து அதிகார சபையோ இந்த மருந்துக்கு அனுமதி வழங்க வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், எந்தப் பொருளையும் மருந்து அதிகாரசபை அல்லது உணவு அதிகாரசபை அங்கீகரிக்க வேண்டும். அத்துடன் நான் அறிந்தவகையில் அந்த பொருள் மருந்தாகவோ அல்லது உணவாகவோ விசேடமாக அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை, குறிப்பிட்ட மருத்துவர் தன்னை ஆயுர்வேத வைத்தியராகப் பதிவு செய்துகொள்ள வில்லை.

எனினும் அவருக்கு எதிராக முறைப்பாடுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதால் அவரை விசாரணைக்கு உட்படுத்தப் போவதில்லை என ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் சதுர குமாரதுங்க தெரிவித்துள்ளார். (ந-இ)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை: மற்றுமொரு குழு நியமிப்பு

கொழும்பு, டிசெ.10
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ள மேலுமொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர உள்ளிட்ட மேலும் சிலர் ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் சட்டமா அதிபரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.
சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். 12 சட்டத்தரணிகள் அடங்கிய குழு சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளது என அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (வ-இ)

தொற்றாளர் எண்ணிக்கை கிழக்கில் 400 ஐ கடந்தது

திருகோணமலை, டிசெ.10
கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 419 ஆக அதிகரித்துள்ளது என கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் மாலை வரை 17 பேர் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்டவர்களில் இதுவரையில் 256பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
தற்போதைய நிலையை உணராமல் சிலர் செயற்படுவதால் ஏனையவர்களும் பாதிக்கப்படும் நிலையேற்பட்டுள்ளது. சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

கலவரத்துடன் தொடர்புடைய கைதிகளே வெலிக்கடைக்கு

சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10
மஹர சிறைச்சாலையில் இடம் பெற்ற கலவரத்துக்கு தலைமை வகித்த மற்றும் அந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் கைதிகள் மாத்திரமே வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.
மேலும், மஹர சிறைச்சாலை கைதிகள் தொடர்பான விசாரணைகளுக்காக தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
அண்மையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்காக இத் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
0112 678 600 தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு மஹர சிறைக்கைதிகள் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

லஞ்சம்– ஊழல் தொடர்பில் மக்கள் முறையிட வேண்டும்

ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, டிசெ.10
இலஞ்ச மற்றும் ஊழல் சம்பவங்கள் தொடர்பில் அது தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரத் தரப்புக்கு உடனடியாக தெரிவியுங்கள் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
சர்வதேச லஞ்ச ஊழல் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் ஊழலை எதிர்த்துப் போராடுவதில் பொதுமக்களை வலுவூட்ட அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் பெரும்பான்மை பலத்துடன் எனது வெற்றியை ஆதரித்தபோது ஊழல் இல்லாத ஒரு வினைத்திறனான நாட்டுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தினர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

655 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, டிசெ.10
மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருந்த மேலும் 655 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாடு திரும்பினர்.
அதன்படி சவூதி அரேபியாவில் இருந்து 293 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 193 பேரும் கட்டாரில் இருந்து 111 பேரும் கட்டு நாய[illegible]யத்தை வந்தடைந்தனர்.
[illegible]பரி சோதனைக்கு உட்[illegible]டுத்தல் முகாம்களுக்கு [illegible]டுள்ளனர். (வ-இ)

இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகள் உடன் அமுல்

விசாரணை அறிக்கையை சபையில் சமர்ப்பித்து நீதி அமைச்சர் உறுதி

கொழும்பு, டிசெ. 10
ஐவரடங்கிய விசாரணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உடன் நடைமுறைப்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.
சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர், நீதி அமைச்சர் அலி சப்ரியால் சபையில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.
மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசாரணைக்குழுவின் இடைக்கால அறிக்கையையே நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.
'கள விசாரணை, சாட்சியங்கள், பரிந்துரைகள் என்று இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கங்கள் உள்ளன. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும். குழுவின் இறுதி விசாரணை அறிக்கை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்கப்படும்' என்றார். (ஒ.44)

நேற்று கன்னி ராசியின் பலன்கள் இடம் பெறுவதற்கு பதிலாக துலாம் ராசியின் பலன்கள் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. கன்னி ராசிக்குரிய பலன்கள் இன்று வெளியாகிறது. தவ றுக்கு வருந்துகிறோம்.

சனிப்பெயர்ச்சி பலன்கள்!

கன்னி

ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல் படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.

எளிமையில் அதிக மகிழ்ச்சி காணும் கன்னி ராசி அன்பர்களே! சனி பகவான் 27.12.2020 முதல் 19.12.2023 வரை உள்ள கால கட்டங்களில் உங்கள் ராசிக்கு 5ஆம் வீடான பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் ஆட்சி பெற்று அமர்வதால் நல்லதே நடக்கும். சனிப கவான் ஆட்சி பெற்றிருப்பதால் கெடு பலன்கள் குறைந்து யோக பலன்கள் அதிகரிக்கும்.

ஏமாற்றங்கள் நீங்கும். தாயாருக்கான மருத்துவச் செலவுகள் குறையும். குடும்பத்தினருடன் அமர்ந்து சிரித்துப் பேசி மகிழக் கூடிய இனிய நிலை உருவாகும். பூர்வீகச் சொத்துப் பிரச்னை தீரும். தாயாருடன் பாச மாக நடந்துகொள்வீர்கள். வீடு கட்டும் பணி மீண்டும் தொடங்கும்.

கோலாகலமாக கிரகப் பிரவேசம் செய்வீர்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். கர்ப்பிணிகள் தொலை தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளை களிடம் தோழமையாகப் பழகுங்கள். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத் தில் 6ம் வீடான கும்பத்தில் அமர்வதால், எதிர்பாராத பணவரவு, திடீர் யோகம் உண்டாகும்.

சனி பகவானின் பார்வை...

சனி பகவான் உங்களின் இரண்டாம் வீட்டைப் பார்ப் பதால், இடம் பொருள் ஏவல் அறிந்து பேசுவது நல் லது. அக்கம்பக்கத்து வீட்டாரிடம் அளவாகப் பழகுங் கள். யாருக்கும் எந்த உறுதிமொழியும் தர வேண் டாம். சனி பகவான் உங்களின் 7ம் வீட்டைப் பார்ப்பதால் மனைவிக்குக் கை, கால் வலி, மறதி வரக்கூடும். மனைவியுடன் வீண் விவாதங்கள் வந்து போகும். சனி பகவான் உங்களின் லாப வீட்டைப் பார்ப்பதால், நெடுநாள் களாக வரமாலி ருந்த பணமெல்லாம் இனி கைக்கு வரும். மூத்த சகோதரர்கள் பாசமாக நடந்து கொள்வர். மார்கெட் டில் புதிதாக வந்த வாகனத்தை வாங்குவீர்கள்.

சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்

உங்களின் விரயாதிபதியான சூரியனின் உத்தராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால், இக்காலகட்டத்தில் காரியத்தடையும் அலைச்சலும் இருக்கும். உத்திரம் நட்சத்திக்காரர்களின் உடல்நலன் பாதிக்கும். 11.05. 2021 முதல் 26.09.2021 வரை சனி பகவான் வக் ரத்தில் செல்வ தால் எதிர்பாராத வகையில் பணம் வரும். திடீர் யோகம் உண்டாகும். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்களின் லாபாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனிபகவான் செல்வதால் வசதி வாய்ப்புகள் பெருகும். ஆனால் அத்தம் நட்சத்திரக்காரர்களுக்கு வீண்பழி, விபத்து, இழப்பு, உடல்நலக் குறைபாடுகள் வந்து போகும். 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால், பணம் வாங்கி ஏமாற்றியவர்கள், திருப்பித் தருவார்கள்.

உங்களின் திருதிய, அட்டமாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனி பகவான் செல்வதால் நெருங் கிய உறவினர், நண்பர்களின் இழப்பைச் சந்திக்க நேரிடும். பூர்வீக சொத்துப் பிரச்சனைகள் வரும். உடன்பிறந்தவர்களுக்கிடையே கருத்துமோதல்கள் அதிகரிக்கும். 27.06.2023 முதல் 23.10.2023 வரை சனி வக்ரமடைவதால் பழைய பிரச்சினைகள் தீரும். புது சொத்து வாங்குவீர்கள். அதிகாரப் பதவி யில் அமர்வீர்கள்.

இல்லத்தரசிகளே! குடும்பத்தில் உங்கள் கை ஓங் கும். அலுவலகம் செல்லும் பெண்கள், வேலைச் சுமை, மன உளைச்சலிலிருந்து விடுபடுவீர்கள்.

வியாபாரிகளே! பண வரவு உயரும். பழைய சரக் குகள் விற்றுத் தீரும். வேலையாள்கள் இனி உங்க ளுக்கு முழு ஒத்துழைப்பு தருவார்கள். வாடிக்கையா ளர்களின் ரசனைகளைப் புரிந்துக்கொண்டு கொள் முதல் செய்யப்பாருங்கள். கூட்டுத்தொழிலில் புதிய பங்குதாரர்கள் அறிமுக மாவார்கள். ஏற்றுமதிஇறக்கு மதி, கடல் வாழ் உயிரினங்களால் ஆதாயம் உண்டு. ஏஜென்ஸி, புரோக்கரேஜ் மற்றும் கல்வி நிறுவனங்க ளால் லாபமடைவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

உத்தியோகத்தர்களே! பணிச்சுமை குறையும். கடி னமான வேலைகளையும் எளிதாக முடித்துக் காட்டு வீர்கள். கேட்ட இடத்திற்கே மாற்றம் கிடைக்கும். துறை மாறிப் பணியாற்றியவர்களுக்கு படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும். சம்பளம் அதிகரிக்கும். கணினித் துறையினருக்கு வெளிநாட்டிலிருந்து ஒப்பந்த அடிப் படையில் பணிகள் கிடைக்கும். இந்தச் சனிப்பெயர்ச்சி செல்வாக்கு தருவதாக அமையும்.

பரிகாரம்: பிரதோஷ காலத்தில் நந்திதேவருக்குக் காப்பரிசி சமர்ப்பித்து வழிபடுங்கள். ஏழைக் குழந்தை களின் கல்விக்கு உதவுங்கள். தடைகள் நீங்கி, முன் னேற்றம் புலப்படும்.

பாடசாலைக்கு ரப் கணினி வழங்கல் போலிச் செய்தி!!

கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10

பாடசாலைகளுக்கு ரப் கணினிகள் வழங்குவது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசால் பாடசாலை மாணவர்களுக்கு ரப் கணினிகள் இல வசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்தி முழுமையாக உண் மைக்குப் புறம்பானது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஏமாற்றும் வகையில் சமூக ஊடகங்களில் இவ்வாறான செய்திகள் வெளியிடப்படுகின் றன. எனவே கல்வி அமைச்சால் வெளியிடப்படும் உத்தி யோக பூர்வ அறிவித்தல்களை மாத்திரம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஐவரும் இராஜினாமா

கொழும்பு, டிசெ.10

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகியுள்ளனர்.

பதவி விலகல் கடிதம் நிதி அமைச் சின் செயலாளரிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது என ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒரு வரும் கல்வியமைச்சின் செயலாளருமான பேரா சிரியர் கபில பெரேரா உறுதிப்படுத்தியுள்ளார்.

5 வருட பதவிக் காலத்தைக் கொண்ட இந்த ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர் கள் தாமாக பதவி விலகினாலொழிய, ஏதேனும் ஒரு முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட் டதன் பின்னர் நாடாளுமன்றத் தில் பிரேரணை நிறைவேற்று வதன் மூலமே அவர்களை பதவி நீக்க முடியும்.

மின்சக்தி துறையின் ஒழுங்கு படுத்தல் பொறுப்புகள் வழங்கப் பட்டுள்ள இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை மூடுமாறு ஜனாதிபதியின் செயலாளரால் திறைசேரி செயலாளருக்கு அண் மையில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-ஜ)

தொற்றைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குக

பொலிஸார் கோரிக்கை



கொழும்பு, டிசெ.10

கொரோனாத் தொற்றைத் தடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பை வழங் குமாறு மாடிக் குடியிருப்பு மற்றும் தோட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டுள்ள பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ள னர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண, குழப்ப நிலைமையை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளு மாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அடிக்கடி தெளிவுபடுத்தி வருகின்றனர் என்று குறிப்பிட்டார். (ந)

சின்னத்திரை நடிகை சித்ரா கொலையா, தற்கொலையா?

சென்னை, டிசெ. 10

பிரபல சின்னத்திரை நடிகை சித்ரா சென்னையிலுள்ள விடுதி ஒன்றில் நேற்று சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அவர் தற்கொலை செய்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

தனியார் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகும் 'பாண்டியன் ஸ்டோர்ஸ்' என்ற தொடர் நாடகத்தில் முல்லை என்ற

பாத்திரத்தில் நடித்து அனைவரின் மனதையும் கவர்ந்தவர் சித்ரா. இந்த நாடகத்தின் மூலம் இவருக்கென தனியான ரசிகர் பட்டாளம் உருவானது. இன்னும் சில தினங்களில் அவருக்குத் திருமணம் நடைபெறவிருந்த நிலையில் சித்ராவின் இறப்புச் செய்தி சின்னத்திரையை ஆட்டம்காண வைத்துள்ளது.

தூக்கில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது. எனினும் சடலத்தின் முகத்திலும் கழுத்திலும் சிறு வெட்டுக்காயங்கள் உள்ளன. ஆதலால் இது கொலையாக இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் முடக்கிவிடப்பட்டுள்ளன. (ம)

மரண அறிவித்தல்



திருமதி இரத்தினம் கனகமணி

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொது மருத்துவமாது-SPHM)

அச்சுவேலி பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் அம்பனை, சுன்னாகம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கனகமணி நேற்று (09.12.2020) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினவேணி, வேணுகோபன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெகதீசன், தவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவஸ்திகா (பயிலுநர் ஆசிரியை), ஷாகித்தியன் (யாழ். மத்திய கல்லூரி), ரிஷான் (யாழ் இந்து கல்லூரி), மதுரகீதன் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கிருஷ்ணபிள்ளை, தங்கம்மா, ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2020) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தி யாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பனை, சுன்னாகம் மேற்கு.
தொடர்புகளுக்கு: 0774584431, 0764535887

தகவல் :
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

மலர்வு
08
.
04
.
1987

உதிர்வு
08
.
12
.
2020

அருளானந்தம் கௌதமி

அச்சுவேலி வளலாயை பிறப்பிடமாகவும் கொழும்பு, வளலாயை வதிவிடமாகவும் கொண்ட செல்வி அருளானந்தம் கௌதமி 08.12.2020 இறைபதம் அடைந்தார்.

அன்னார் அருளானந்தம் - இராஜேஸ்வரி (சின்ன வண்ணம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, நாகரத்தினம் அவர்களின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற திருமேனி மற்றும் அருளம்மா அவர்களின் பேர்த்தியும், சுபாஷினியின் பாசமிகு அக்காவும், சிவகணேஷன், தனுஜா, காலஞ்சென்ற விஜயலட்சுமி, சிவலிங்கம், தனலட்சுமி, சண்முகரட்ணம், சுகிர்தலட்சுமி, ருக்குமணிதேவி, மகேந்திரம், கமலாதேவி, ரட்ணசோதி ஆகியோரின் பாசமிகு மருமகளும், குணபாலன் சாந்தினி, சிவபாலன் சிவயோகம், இரட்ணேஸ்வரி, லோகநாதன், ஆகியோரின் பெறா மகளும், லின்டாவின் சகோதரியும், மயூரன், வத்சலா, கமலகாந்த், சசிகாந்த், வனஜா, அஞ்சனன், ஆத்மி, கிருத்திகா, கீதன், மாலவன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வளலாய் பூனன்காடு இந்து மயானத்துக்கு பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விமான நிலைய வீதி,
வளலாய் மேற்கு,
அச்சுவேலி.

தகவல். குடும்பத்தினர்
077 768 4347
077 502 9211

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 41 வயது இளம் தோற்றமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்ப்பில்லை.
தொடர்புகளுக்கு: **077 905 8615**
(வைபர் & வாட்ஸ் ஆப்)

வேலையாள் தேவை

சாவகச்சேரியில் உள்ள காட்வெயார் கடைக்கு வேலையாட்கள் தேவை.
சாவகச்சேரியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
077 88 666 40, 077 2250 149

கண்ணீர் அஞ்சலி

நடராஜா ஸ்ரீகாந்தா

(இளைப்பாறிய மதுவரித் திணைக்கள ஆணையாளர் கண்டி, கொழும்பு)

திரு.நடராஜா ஸ்ரீகாந்தா அவர்கள் நேற்று (09.12.2020) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய தில்லைக் கூத்தனை பிரார்த்திக்கின்றோம்.

உடன் பிறவா சகோதரரும்,
ஆருயிர் நண்பரும்
வே.பேரம்பலம் குடும்பம்

மரண அறிவித்தல்

சந்தியா செபஸ்ரி இம்மானுவல் (Boss)

யாழ்ப்பாணத்தை பிறப்பிட மாகக் கொண்ட சந்தியா செபஸ்ரி இம்மானுவல் (Boss) 08.12.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியா செபஸ்ரி செபமாலை ஆகியோரின் அன்பு மகனும், லூர்த்தம்மாவின் (செல்வராணி) அன்புக் கணவரும், றெஜினோல்ட் ,ஜெரார்ட் ராஜேந்திரா, சிறாணி, சாந்தக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறைச்சாலை), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆன்திரேசா, ரவித்தா, ஜெயந்தன், யூட் (ஆசிரியர், யா/அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்துறை) ஆகியோரின் மாமனாரும், பிரிந்தினி, சிவாணி, திலக்ஷன், திவ்யா, பிரியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் மரணச் சடங்கு 09.12.2020 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.
03, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
077 967 2059

ஒவ்வாமை உள்ளோர் தடுப்பூசியை தவிர்க்கவும்

கொழும்பு, டிசெ. 10

உடலில் நீண்டகாலம் ஒவ்வாமை(அலேர்ஜிக்) அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள் 'பைசர்பயோஎன்ரெக்' தடுப்பூசியைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

புழக்கத்துக்கு வந்துள்ள புதிய கொரோனா தடுப்பூசியின் பக்க விளைவுகள் தொடர்பாக வெளிவருகின்ற முதலாவது தகவல் இது.

நேற்றுமுன்தினம் தடுப்பூசி ஏற்றப்பட்ட இங்கிலாந்தின் தேசிய மருத்துவ மனை சேவையாளர்கள் இருவருக்கு உடலில் ஒவ்வாமை அறிகுறிகள் வெளிப்பட்டிருப்பதை அடுத்தே இந்த அவசர ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

மருத்துவப் பணியாளர்கள் இருவரும் ஏற்கனவே நீண்டகாலம் ஒவ்வாமையால் அவதிப்பட்டு வந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருவரும் வைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் தோல் தடித்தல், மூச்சு விடுவதில் சிரமங்கள், குருதி அழுத்தம் குறைதல் போன்ற ஒவ்வாமையின் சிறு அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் அவர்கள் இருவரும் குணமடைந்து ள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

வாடகைக்கு விடப்படும்
அலுமினிய பொடியுடன் (Body) கூடிய படி ரக வாகனம் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.
076 205 6567

பெண் வேலையாட்கள் தேவை
கோழி இறைச்சிக் கடையில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.
தொடர்பு: 077 271 8149
Viber:0041779243687

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவினார் சமூக சேவையாளர்



மன்னார், டிசெ. 10

புரேவி புயலால் பாதிக்கப்பட்ட மன்னார் சாந்திபுரம், எமில்நகர், அந்தோனியார்புரம், தேவன்பிட்டி ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவையாளர் பெருமாள் சிவகுமாரன் உதவிகள் வழங்கினார்.

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள், கோவில்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்குத் தேவையான பாய்கள், நுளம்பு வலைகள், உலருணவுப் பொருட்களை சமூக சேவையாளர் வழங்கினார்.

(த-213)

அறிவித்தல்

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானத்துறை மற்றும் பொது ஆங்கிலப் பாடம் ஆகியவற்றுக்கு நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - I(அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை– 2020 தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் கோரப்பட்ட மேற்படி பதவிக்குரிய விளம்பரம் தொடர்பாக,

01. விளம்பரத்தின் பந்தி 04.5 ஆனது பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதிற்கு குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
02. இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.01.04 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
03. மேலதிக விபரங்களை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
10.12.2020

மரண அறிவித்தல்

செல்வன் நவயோகநாதன் மதூசன்



சுவிஸ்லாந்தை பிறப்பிடமாகவும் லண்டன் New Malden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் தவயோகநாதன் மதூசன் 03.12.2020 வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா ஆசைமணி, செல்லத்துரை அன்னம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், தவயோகநாதன் (ரகு), சுதாராணி தம்பதியரின் அன்பு மகனும், தனூஷிஜா, கார்த்தியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவனிதன், காலஞ்சென்ற குஞ்சு மற்றும் ரதி ஆகியோரின் பெறாமகனும், சிவராஜசிங்கம் (வவா), சற்குணசிங்கம் (வேவி), சிறிராஜசிங்கம், ஜெயராஜசிங்கம், ஜெகதாசன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான ரவீந்திரராணி, நிர்மலராணி ஆகியோரின் அன்பு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2020) வியாழக்கிழமை லண்டனில் உள்ள ElmCroft Community Centre, 570, London Rd, Northcheam, Sutton Sm 39AB இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ரகு - 447 828 115279

தகவல்:
சிவராஜசிங்கம் (வவா) மாமா,
கற்பக்குணை, கந்தரோடை.

பெறுகை அறிவித்தல்

சபைநிதி வேலைத்திட்டம் - 2020

நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்கபொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தரமுன்னுரிமை என்பன கருத்தில்கொள்ளப்படும்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி– 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **2020.12.10**ஆம் திகதியிலிருந்து **2020.12.24** ஆம் திகதிவரை மு.ப**9.00** மணிமுதல் **14.00** மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமானகேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் **2020.12.10** ஆம் திகதியிலிருந்து **2020.12.24** ஆம் திகதிவரை மு.ப **9.00** மணிக்கும் **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-** (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு **2020.12.24** ஆம் திகதி**14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2021.02.11) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

தொ. இல	கேள்விஎண்	வேலைவிபரம்	மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக)	ஒப்பந்த காலம்	வேண்டப் படும் தரம்	கேள்விபிணைவைப்பு (ரூபா)	
						பிணை வைப்பு	செல்லு படியாகும் காலம்
01	NP/14/41(3)2/ CF/39/2020	உழவு இயந்திர பெட்டி தயாரித்து வழங்கல்.	0.650	02 மாதம்	வியாபார பதிவு	6,500.00	2021.03.11
02	NP/14/41(3)2/ CF/40/2020	கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் எரிகொட்டகை அமைத்தல், கோவிற்குடியிருப்பு.	0.775	02 மாதம்	C9/C8	8,000.00	2021.03.11
03	NP/14/41(3)2/ CF/41/2020	கத்தாப்படி வீதி வலதுபக்க இரண்டாம் வீதி புனரமைப்பு, நுணாவில் கிழக்கு.	1.233	02 மாதம்	C9/C8	12,500.00	2021.03.11
04	NP/14/41(3)2/ CF/42/2020	கந்தசாமிகோவில் வீதி 01 ஆம் ஒழுங்கை புனரமைப்பு மிகுதி வேலை, மீசாலை மேற்கு.	0.586	02 மாதம்	C9/C8	6,000.00	2021.03.11

கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2020.12.17 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
2020.12.10

யாழ் ஒளி மின்நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

சேவைகளுக்கான கேள்வி கோரல்

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் பொறியியலாளர் போக்குவரத்துக்காக **மகிழ் ஊர்ந்து (Motor Car)** ஒன்று 01 வருட ஒப்பந்த அடிப்படையில் தேவைப்படுகின்றது. இது சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் 20.01.2021 பி.ப 2.00 மணிவரை பின்வரும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான பொறியியலாளர்,
யாழ் ஒளி மின்நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
தொ.பே.இல. 021 224 2247 / 8

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897

கேள்விப்பத்திர பெறுமதி. - ரூபா. 1,000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு. - ரூபா. 16,200.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை
Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 21.01.2021 பி.ப 2.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 23 . 02 . 1988

உதிர்வு 27 . 10 . 2020

அமரர் தனபாலசிங்கம் இலட்சியசீலன்

பூமியிலே புகலிடமாய் மலர்ந்தாய்
சிரித்த முகத்துடன் திட்டங்கள் வகுத்து
திடமாக வாழ்வதற்கு முன்
திசைமாறிப் போனது ஐயா உன்கதை
45 ஆம் நாள் ஆனாலும்
மாறாது ஐயா உன் நினைவு

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்குபற்றி உதவிகள் புரிந்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (10.12.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோணாவளை வசாவிளான்,
கோணாவளை.

குடும்பத்தினர்

நினைவஞ்சலி

15 ஆம் ஆண்டு

பிறப்பு
20.09.1942
இறப்பு
31.10.2005

கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

4 ஆம் ஆண்டு

பிறப்பு
07.02.1932
இறப்பு
10.12.2016

இரத்தினம் சரஸ்வதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வங்களுக்கு
ஆண்டு நிறைவதனில் அஞ்சலிகள் பல

இல.19, கனகரட்ணம் வீதி,
அரியாலை.

என்றென்றும் உங்கள் நினைவுகளில்
குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்லத்துரை பேரின்பநாதன்
(SLPS - I)
யா/ சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி
முதல்வர்

செல்லத்துரை பேரின்பநாதன் அவர்கள் **04.12.2020** அன்று **அகில இலங்கை சமாதான நீதவானாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி** அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.
தொடரட்டும் தங்கள் பணி

வாழ்த்துவோர்:
வட்டமேசை - யா/ டிறிபேக்கல்லூரி சாவகச்சேரி.

டெங்கு விழிப்புணர்வு

வவுனியா, டிசெ. 10

வவுனியா வைரவப் புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு நேற்று நடைபெற்றது.

டெங்கு நுளம்பு பரவல், அதன் தாக்கம், தடுப்பு பற்றி விளக்கமளிக்கப்பட்டது. (த-18)

நினைவலைகள்

இருபத்து மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சின்னத்தம்பி சின்னையா
(ஓய்வுபெற்ற தபாலதிபர்
(Radio Officer - Foreign Ship)
திதி: துதியை

மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சின்னையா சரோஜினி
திதி: தசமி

நாளெல்லாம் நலமாய் வாழ காலமெல்லாம்
கரம் தந்த வாழ்வின் இரு தீபங்கள்
நித்தம் உங்களைத்தேடித் தேடி அழுகின்றது மனசு
நித்தம் இரங்கும் இறைவன்
ஏன் அழைத்தான் உங்களை
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்

நினைவுகளுடன்
பிள்ளைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 10.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது செல்வன்

வசந்தகுமார் றியாஸ்

பிறப்பு
04.01.2014

இறப்பு
10.12.2019

திதி: 10.12.2020

அன்பான றியாஸே! பாசத்தின் திருவுருவே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உன் பிரிவின் துயர் ஆறாது ஒருபோதும்
உன் ஆத்மா சாந்திபெற துதிக்கின்றோம்.

அன்புடன் கலா [அம்மம்மா]
V.H.N, வீதி,
இருபாலை மடத்தடி.

யாழ். கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

கிட்டினர் நாகராசா

அவர்களின்

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆறாத் துயரத்தில் எம்அனைவரையும்
மூழ்க விட்டு விட்டு
மீளாத்துயிலில் ஆழத் தூங்கிவிட்ட
எம் குடும்ப தெய்வமே!

வராதோ இனியொருநாள்
இம் மண்ணில் உங்களோடு
மகிழ்வோடு நாமும் இனிதே
கழித்திருப்பதற்கு

ஆண்டுகள் ஐந்துதான் இங்கு
கடந்து வந்து விட்டாலும்
ஆற்றிவிட முடியவில்லை
இவ்வுலகில் எம் துயரத்தை

தீராத துயரத்திலும் தெய்வமான
உங்களின் ஆத்மா நித்திய சாந்தி பெறதுதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 02 . 1942

இறப்பு
07 . 12 . 2020

அப்புத்துரை ஜெயரத்தினம் BA.SLAS (ஓய்வு)

(முன்னாள் செயலர் புனர்வாழ்வு புணரமைப்பு,அமைச்சு.
முன்னாள் கொழும்பு. Senior Governance Advisor G.TZ)

அவர்கள் 07.12.2020 அன்று காலமானார்

அன்னார் திருமதி லோகநாயகியின் கணவரும், துஷ்யந்தி, தமயந்தி, கல்யாணி ஆகியோரின் தந்தையும், புவிராஜன், நக்கீரன், கண்ணன் ஆகியோரின் மாமனாரும், ஜானகி, அர்ச்சுனன், பீஷ்மன், ஆதிரன், மிருணாளினி ஆகியோரின் தாத்தாவும், அரியாலையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான அப்புத்துரை - பூமணி தம்பதியரின் மூத்த மகனும், கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சடையர் - தையல்நாயகி தம்பதியரின் மருமகனும், டாக்டர் யோகராஜா, பாலச்சந்திரன், தெய்வேந்திரன், சொர்ண காந்தரூபி, ரவீந்திராதேவி, புவனேந்தி ரராஜா ஆகியோரின் அண்ணாவும், காலஞ்சென்ற கங்கைநாதன் மற்றும் கமலநாயகி, லிங்கநாதன், ரங்கநாயகி, சிவலோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் முதலிக்கோயில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் 08.12.2020 அன்று நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மேலும் இந் நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும், அனுதாபச்செயதி தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்.
021 205 3078
குடும்பத்தினர்

அனைவரும்....

இவ்வாறு கொழும்பு மகசின் சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் நேற்றிரவு வெளிவந்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையையடுத்து, ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அரசு சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது என அறியமுடிகின்றது. அந்தவகையில் தகுந்த பொறிமுறையை இனங்கண்டு, சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் 8 ஆயிரம் கைதிகளை விடுவிப்பதற்கும் மரண தண்டனை மற்றும் ஆயுள்தண்டனைக் கைதிகளின் தண்டனைக் காலத்தை வரையறுப்பதற்குமான முன்னாயத்தங்களை மேற்கொண்டிருப்பதாக சிறைச் சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தி அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் கட்சி, அரசியல், பிரதேச வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு மனித நேயத்துக்கு மதிப்பளித்து கொள்கையளவில் ஒன்றுபட்டு எமது விடுதலைக்கு வழிசமையுங்கள் என வினயமுடன் வேண்டுகின்றோம்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிறையே வாழ்க்கை எனச் சீரழிந்து கொண்டிருக்கும் அரசியல்கைதிகளாகிய நாம் உயிரை மட்டுமே கையில் பிடித்துக்கொண்டு நிகழ்காலத்தை நகர்த்துகின்றோம். நாட்டில் தேர்தல்கள் வருகின்றபோதும், ஆட்சி அதிகாரங்கள் மாறுகின்றபோதும் எங்களது சிறை வாழ்வுக்கு விடிவு பிறக்கும் எனக் கண்ட கனவுகள் எல்லாம் கானல் நீராகிப் போனது.

விடுதலையை வலியுறுத்தி நாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட போதெல்லாம் திறந்த வாக்குறுதிகளும், தீராத நோய்களுமே எமக்கு மிஞ்சிப் போனது. இதுவரை தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு எம்மோடு சிறையிருந்த 10 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் சிறைக்குள்ளேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்கள். அதுதவிர சிறை வன்முறைகளின்போது நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். தற்போது உயிர்க்கொல்லித் தொற்று நோயான கொரோனா சிறைக் கொத்தணியாக மாறி ஆயிரக்கணக்கான கைதிகளை அச்சுறுத்துவதுடன், சில உயிர்களையும் பலிகொண்டிருக்கின்றது. எமது குடும்ப உறவுகள் உழைக்கும் கைகளை இழந்து நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். எமது பிள்ளைகள் தந்தையரின் பாசத்துக்காக ஏங்கித் தவிக்கின்றார்கள். வயதான எமது பெற்றோர் தமது இறுதிக்காலத்திலாவது 'என் பிள்ளை கொள்ளியிட உயிரோடு வருவானா?' எனக் கண்ணீரோடு காத்திருக்கிறார்கள். எனவே, சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணிகளால் சிறை வைக்கப்பட்டுள்ள எமது விடுதலைக்கு வழிசமைக்க அனைவரும் முன்வாருங்கள். இன்று சிறைகளில் வாடுகின்ற நாம் சுகபோகமாக வாழத் தெரியாமல் சிக்குப்பட்டுப் போயிருப்பவர்கள் அல்லர். எமது சொந்த சுயநல இலாபத்துக்காகச் செயற்பட்டு நாம் சிறைக்கு வந்தவர்கள் அல்லர் என்பதைத் தயவு செய்து சற்றுப் புரிந்துகொள்ளுங்கள்.

மூன்றரை தசாப்த கால போர் முடிவுறுத்தப்பட்டு 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டு தசாப்தமொன்று கடந்துள்ள நிலையிலும்கூட, 20 வருடங்களாகச் சிறையிருக்கும் எமக்கு விடுதலை வாசல் திறக்கப்படவில்லை என்பது பெரும் துக்கமல்லவா? எனவே, சர்வமதத் தலைவர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூக நல அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என அனைத்துத் தரப்புக்களும் அரசியல் கைதிகளான எமது விடுதலை விடயத்தில் தத்தமது மனிதாபிமானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

அரசமைப்பின் பிரகாரம் சிறைக் கைதிகளின் விடயத்தில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது. அந்தவகையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விடுதலை செய்யப்படுவோர் பட்டியலுக்குள் தமிழ் அரசியல் கைதிகளையும் உள்வாங்குமாறு, அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் தனித்தனியான கருணை மனுக்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு முன்வைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதன்மூலம் எமக்கும் சமூகத்துடன் இணைந்து வாழ ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் எம்மைப் பிரிந்து நித்தமும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது உறவுகளின் கண்ணீருக்கும் ஒரு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கின்றோம்' என்றுள்ளது. (ம-22)

அரசியல் கைதிகளை...

கள் கூட்டாகக் கையெழுத்திட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதிக்குரிய இந்தக் கடிதம் பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நேற்றுக் கையளிக்கப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்சவை தமிழ் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நாடாளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சிறைகளில் இருக்கும் 80க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியே குறித்த சந்திப்பு இடம் பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன், எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் பிரதமருடனான இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி இரா.சம்பந்தன், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார்பொன்னம்பலம், மனோகணேசன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், வே.இராதாகிருஷ்ணன், இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரன் மற்றும் தவராசா கலையரசன் உள்ளிட்ட 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஜனாதிபதிக்குரிய கடிதமும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. (ம-22)

உதய கம்மன்பிலவின்..

வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் நிலைப்பாட்டையே உதய கம்மன்பில வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆளுங்கட்சியிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு என்னவென்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் அபிவிருத்தி மற்றும் பொருளாதாரரீதியிலான பிரச்சினைகள் மாத்திரமே இருக்கின்றன, அரசியல் ரீதியான பிரச்சினை இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இந்நிலையில் அரசியல் கைதிகள் இருக்கின்றனர் என கூறினால், அரசியல் பிரச்சினையும் இருக்கின்றது என்பது அம்பலமாகிவிடும். இதனை மூடிமறைப்பதற்காகவே அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என இனவாதத்தின் காவல் நாயகனான கம்மன்பில குறிப் பிட்டுள்ளார். அவரின் இந்த அறிவிப்பு என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறுகோரி ஆளுங்கட்சி பக்கமுள்ள அரசியல்வாதிகள், நீதி அமைச்சரிடம் மனுவைக் கையளித்தனர். ஜனாதிபதியை சந்தித்து பேசவும் திட்ட மிட்டுள்ளனர். எனவே, எப்படி சந்தித்தாலும் அரசின் நிலைப்பாடு இதுவே என்பதை கம்மன்பில இடித்துரைத்துள்ளார். தற்போது ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்யபோகின்றனர்?

துமிந்த சில்வாவுக்காக எல்லோரிடமும் கையொப்பம் வாங்கியவர்கள் ஏன் இது விடயத்தில் தனித்து செயற்பட்டனர்? தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒன்றுமை இல்லை. தனித்தனியாக மனுக்களை, அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனர். இந்நிலைமை மாறவேண்டும். அரசியல்கைதிகளுக்காக ஓரணியில் திரண்டு செயற்படவேண்டும், என்றார்.

அதேவேளை, உதய கம்மன்பில சொல்வது அப்பட்டமான பொய்யாகும் என்று ஐக்கிய சோசலிசக்கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

'தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் எதுவும் இல்லை, அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது என்ற தொனியிலேயே அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசியல் காரணங்களுக்காகவே தமிழ்க் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்' என்றும் அவர் கூறினார்.

அத்துடன், அமைச்சர் உதய கம்மன்பிலவின் கருத்தை விக்கிரமபாகு தலைமையிலான நவசமமாஜக் கட்சியும் கண்டித்துள்ளது. (ஒ.44)

சபாநாயகர்...

சம்பிரதாய 'பட்ஜெட் தேனீர் விருந்து' சபாநாயகர் இல்லத்தில் மாலை நடைபெறவுள்ளது. ஒவ்வொரு வரவு - செலவுத் திட்டமும் நிறைவேற்றப்பட்டதும் இந்த விருந்து நடைபெறுவது வழக்கம். இம்முறை கொரோனாப் பெருந்தொற்று அபாயத்தில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் மத நம்பிக்கையுடன் தொடர்புடைய கார்த்திகை விளக்கீடும் அரச படைகளினால் குழப்பப்பட்டது. மரண, திருமண நிகழ்வுகளுக்கும் வரையறுக்கப்பட்டவர்களே பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், இன்றைய பட்ஜட் விருந்துக்கு 500 பேர் வரையில் அழைக்கப்பட்டுள்ளனர். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த விருந்து நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. நாடாளுமன்ற ஊழியர்கள் சபாநாயகரின் இல்லத்தை பட்ஜெட் விருந்துக்காக நேற்றுமுன்தினம் தொடக்கம் அலங்கரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

நல்ல செய்தி....

ததாவது:

'தமிழ் அரசியல் கைதிகளை ஆளுந்தரப்பிலுள்ள சிலர் இனவாத ரீதியில் பார்ப்பது வேதனை தரும் விடயமாகும். இதுதொடர்பில் அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர்களைத்தான் நாம் 'தமிழ் அரசியல் கைதிகள்' என்கின்றோம். அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அவர்களின் விடுதலை தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கடிதம் அனுப்பியுள்ளோம். அந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்தநிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் நல்ல செய்தி வரும் என்று நாம் காத்திருக்கின்றோம்' என்றார். (ம-22)

கோத்தாவுடன்...

முன்வைத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் நேரில்பேசி தீர்க்கமான முடிவொன்றை விரைவில் எடுப்போம்' இவ்வாறு உறுதியளித்தார் பிரதமர் மகிந்த ராஜபக்ச. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் காலம் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியுள்ளனர். அந்தக் கடிதம் பிரதமர் மகிந்த ராஜபக்சவுடனான நேற்றைய சந்திப்பின்போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்றத்தில் எதிரணியிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் குறித்த உறுப்பினர்களால் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, குறித்த கைதிகளின் விடுதலை தொடர்பிலும் அவர்கள் என்னுடன் பேச்சு நடத்தியுள்ளனர். ஜனாதிபதிக்குரிய கடிதத்தை அவரிடம் நான் சமர்ப்பிக்கவுள்ளேன். அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபருடனும் நேரில் பேசி தீர்க்கமான முடிவொன்று விரைவில் எடுக்கவுள்ளோம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்துக்கிணங்க இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாட்டையும் செய்துகொடுக்கவுள்ளேன்' என்றார். (ம-22)

ஜப்னா ஸ்ரேலியன்ஸ் தோல்வி; கண்டி ரஸ்கர்ஸிடம் வீழ்ந்தது!

கொழும்பு, டிசெ. 10

லங்கா பிறிமியர் லீக் தொடரில் நேற்றிரவு இடம்பெற்ற ஆட்டத்தில் ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணியை 6 இலக்குகளால் வீழ்த்தி அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்தியது கண்டி ரஸ்கர்ஸ்.

ஹம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ச சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஜப்னா அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

ஜப்னா அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகிய அவிஷ்க ஓட்ட மெதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார். தொடர்ந்து வந்த சார்ளஸ் (17), அசலங்க (18) ஓட்டங்களுடன் ஏமாற்றினர்.

நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த மலிக், பானுக இணை நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. மலிக் 44 பந்துகளில் 59 ஓட்டங்களையும் பானுக 21 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க பின்வரிசை வீரர்கள் சோபிக்கத் தவறினர். இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 150 ஓட்டங்களை பெற்றது ஜப்னா ஸ்ரேலியன்ஸ். பந்துவீச்சில் பிரதீப் 3 இலக்குகளையும் ஸ்ரெய்ன், பெர்ணாண்டோ, குணரத்ன தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

151 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கண்டி ரஸ்கர்ஸ் அணிக்கு ஆரம்ப வீரர்களாக குர்பாஸ், பெரேரா இணை களமிறங்கியது. குர்பாஸ் 8 ஓட்டங்களுடன் வழமையைப்போல் சொதப்ப பெரேரா நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

எனினும் மறுமுனையில் மென்டிஸ் (2), ரெய்லர் (11) ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப பெரேராவும் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த அசேல குணரத்ன, இர்பான் பதான் இணை அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த 19.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அசேல குணரத்ன 52 ஓட்டங்களையும், இர்பான் பதான் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க இரு இலக்குகளையும் லக்மல், ஒலிவர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக அசேல குணரத்ன தெரிவு செய்யப்பட்டார். (ம-ரி4)

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

தவிசாளர்...

றம் விடுவித்தது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் மீதான குற்றச்சாட்டு வழக்கை பொலிஸார் முன்னெடுக்கும்போது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன், நீதிமன்றில் தவறாது முன்னிலையாக வேண்டும் என்றும் மன்று உத்தரவிட்டது.

பிரதேச சபைக்கு சொந்தமான அச்செழு அம்மன் கோவில் வீதியில் பிரதேச சபையின் தீர்மானமின்றி சட்டத்துக்கு முரணாக அடிக்கல் நடப்பட்டு காட்சிப் பதாகையும் அமைக்கப்பட்டிருந்தது. காட்சிப் பதாகையை தவிசாளர் அகற்றி இருந்தார். விளம்பரப்பதாகை அகற்றப்பட்டமை தொடர்பில் தவிசாளர் நிரோஷ் பொது உடமைக்கு சேதம் விளைவித்தார் எனக் குற்றம்சாட்டி கடந்த திங்கட்கிழமை முதல் அவரை கைதுசெய்வதற்கு அச்சுவேலி பொலிஸார் தீவிரமாக முயன்று வந்தனர். இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்பிணை கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

சட்டத்தரணிகளான வி.திருக்குமரன் மற்றும் வி.மணிவண்ணன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் முன் பிணை விண்ணப்பத்தை மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தனர். மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் நேற்று அச்சுவேலி பொலிஸாரையும் மன்றில் தோன்றுமாறு தெரிவித்து மனு மீதான விசாரணையை ஒத்தி வைத்திருந்தது.

இந்த விண்ணப்பம் மீதான விசாரணை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது விண்ணப்பதாரர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டத்தை பொலிஸார் சுட்டிக்காட்டினார். அத்துடன் விண்ணப்பதாரர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், முன்பிணைக்கான காரணத்தை எடுத்துரைத்தார். அதனால் விண்ணப்பதை ஏற்றுக்கொண்ட நீதிமன்று; முன்பிணையை வழங்கி கட்டளையிட்டது. (ம-ஒ.26)

பவுசருடன்...

சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த விபத்து ஏ9 வீதி நுணாவில் வைரவர் கோவிலடியில் நேற்று மதியம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் நாவாந்துறை கண்ணாபுரத்தைச் சேர்ந்த யோகதாசன் மக்சியோன் (வயது -5), வினிஸ்ரன் ஆன் கரோலினி (வயது- 30) ஆகியோரே உயிரிழந்தனர். யாழ்ப்பாணம் மடத்தடிச் சந்தியைச் சேர்ந்தவர்களான ஜேசுதாஸ் மக்டிலோட் (வயது 9), ஜேசுதாஸ் ஆன்கரோலின் (வயது 35) மற்றும் சந்தை வீதி, உடுவிலைச் சேர்ந்த பிராங்ளின் லியோனி (வயது - 30) ஆகியோரே படுகாயமடைந்து சிகிச்சை பெறுகின்றனர்.

வைரவர் கோவிலடிச் சந்திக்கு அருகிலுள்ள ரயர் கடைக்கு முன்பாக திருத்த வேலைக்காக எரிபொருள் பவுசர் நிறுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் திடீரென்று அந்த பவுசரின் பின்பகுதியுடன் மோதியது.

இந்த விபத்தில் காரில் பயணித்த ஐவரும் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அம்புலன்ஸ் மூலமாக மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

எனினும், அவர்களில் மேற்குறித்த பெண்ணும் சிறுவனும் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்தனர். மற்றையமூவரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அவர்களில் ஒரு சிறுவனும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்களின் இறப்பு விசாரணை நேற்று நடைபெற்றது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்கள் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

விபத்துக்குள்ளான கார் சாரதி இருக்கையின்கீழ்ப்பகுதிமற்றும்பின்இருக்கையின் கீழ்ப் பகுதி ஆகிய இடங்களில் குருதிக் கறைகள் சிந்திக்காணப்படுகின்றன.

காரின் ஒரு சில்லு காற்றுப் போனதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் கூறுகின்றனர். காரின் கதவுகள் மற்றும் அதன் உட்பகுதிகள் சிதைந்துள்ளன. அதை நகர்த்த முடியாத நிலையில், அதன் சில் அந்த இடத்தில் மாற்றப்பட்டு கார் பொலிஸ் நிலையத்துக்கு கட்டி இழுத்துச் செல்லப்பட்டது. எரிபொருள் பவுசும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

காரில் பயணித்தவர்கள், தென்மராட்சியில் உள்ள உறவினர் ஒருவரின் திருமண வருட நிறைவுக் கொண்டாட்டத்துக்குச் சென்றுகொண்டிருந்தனர் என்று ஆரம்பவிசாரணையில்தெரிவிக்கப்பட்டது. விபத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் சுமார் அரை மணித்தியாலமாக மக்கள் குவிந்திருந்தனர். (தஒ,9,159,26)

இழப்பீடுகள்...

முன்னெடுக்கப்படுகின்றன என அறிய முடிகின்றது. அம்பன் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இருப்பினும், சேத விவரங்கள் உரியமுறையில் அதிகாரிகளால் மதிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் மதிப்பீடுகளை மீள மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மீள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது. (ம-ஒ.5)

30,000..

திப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் (மினுவாங்கொடை, பேலியகொட, சிறைச்சாலை கொத்தணிகள்) இதுவரையில் 26 ஆயிரத்து 516 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. அத்துடன் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 131 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 72ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 21ஆயிரத்து 800 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 128 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். அத்துடன் 144 உயிரிழந்துள்ளனர். (ம-22)

நீர் இறைத்து தரப்படும்
மழையால் வீட்டு வளவுகளில் தேங்கி நிற்கும் நீர், கிணறு, குழளாய்க் கிணறு என்பன இறைத்து கொடுக்கப்படும்.
077 164 1454 அருண்

PEARL HOTEL A9 வீதி, நாவற்குழி சந்தி, நாவற்குழி
வேலைவாய்ப்பு
➤சமையல் உதவியாளர் ➤ உணவு பரிமாறுபவர் ➤ ரொட்டி போடுபவர்
மேற்குறித்த வேலைகளில் ஆர்வம் உள்ளவர்கள்
11.12.2020 - 20.12.2020 காலப்பகுதியில் காலை 8 - 10
இடையில் நேரில் சமுகம் தரவும் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
வாடகைக்கு வாகனம் உண்டு
எமது நிறுவனத்தில் ஹயஸ் வாகனம் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்
076 546 3744, 076 230 2029

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.